இதழ் - 04

# கரங்கள்




சாவகச்சேரி பிரதேச சபை
பொது நூலகம்
கைதடி
2022

வாசகர் வட்டச் சஞ்சிகை 2022

**தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கைதடி பொது நூலக வாசகர் வட்டத்தினரால் வெளியீடு செய்யப்பட்ட**

# கரங்கள்

**இதழ் - 08**

தேசிய வாசிப்பு மாதம்
ஒக்ரோபர் - 2022

**கருப்பொருள்**
அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு

***சாவகச்சேரி பிரதேச சபை***
***பொது நூலகம்***
***கைதடி***

**கரங்கள் - இதழ் -08**

**வெளியீடு**
வாசகர்வட்டம்,
பொது நூலகம்,
கைதடி

**வெளியீட்டுத்திகதி**
13.11.2022

**முகவரி**
கைதடி தெற்கு,
கைதடி

**இதழாசிரியர்**
திரு கே.எம்.செல்வதாஸ்

பக்கங்கள் - 40

**அச்சு**
பரணி அச்சகம்
நெல்லியடி

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இரந்தபடி இருப்பது போல்
கன்னடமுங் களிதெலுங்கும் கவின் மலையாளமும் துளுவும்
உன்னுதரத் தேயுதித்தே ஒன்றபல வாகிடினும்
ஆரியம் போல் உலக வழக்கழிந் தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!

- மனோன்மணீயம் பெ.சுந்தரனார்

## சஞ்சிகை வெளியீட்டுக் குழு

| | |
|---|---|
| தலைவர் | - திரு கே.எம்.செல்வதாஸ் |
| செயலாளர் | - திரு க.கஜீபன் |
| உபசெயலாளர் | - திரு லோ.சிவச்செல்வன் |
| பொருளாளர் | - திரு சே.கௌசிகன் |
| உறுப்பினர்கள் | - செல்வி வே.கேர்த்திகா |
| | - செல்வி த.மாதுரி |
| | - திரு தி. கோணேஸ்வரன் |
| | - திரு த.கல்கிராம் |
| | - திரு சே.சிவஜனன் |
| | - திரு சே.ஜனுஜா |

## மலரினுள்ளே....


1. “கை கொடுக்கும் கரங்கள்“ தவிசாளரின் வாழ்த்துச் செய்தி
2. “ஆற்றல்களை வளர்க்கும் சஞ்சிகை“ ஓய்வுநிலை அதிபரின் வாழ்த்துச்செய்தி
3. நூலகரின் உள்ளத்திலிரந்து
4. இதழாசிரியரின் உள்ளத்திலிருந்து
5. கிராம நூலகங்களும் அவற்றின் சேவைகளும்
6. வாசிப்பும் மனித வாழ்வின் உயர்வுகளும்
7. வாழ்க்கைக்கு வழிகாட்டும் இலக்கியச் செய்திகள்
8. மாணவரின் கல்வி மற்றும் நல்வாழ்வுக்கு உறுதுணையாகும் வாசிப்புப் பழக்கம்
9. வாழ்வைச் சிறப்பாக்கும் நேர முகாமைத்துவம்
10. பள்ள நினைவுகள்
11. தூய தமிழன் என்றும் துவண்டு போவதில்லை
12. இசைக்கலை
13. போதை எனும் தீயபாதை
14. சக காலத்தில் நூலகமும் வாசிப்பும்
15. என்னுடன் புத்தகம் இருந்தால்
16. அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு
17. இன்றைய பொருளாதாரத்திற்கு இளைஞர்களின் பங்கு
18. ஓவியம்
19. சுவரொட்டி
20. தன் வினை தனக்கே கேடானது
21. நேர்மைக்குப் பரிசு
22. உடைந்த பேனாவின் சுயசரிதை
23. மரம் நடுவோம்
24. பொய் சொல்லக்கூடாது பாப்பா!
25. விநாயகரின் மறுபெயர்களும் அதற்கான காரணங்களும்
26. கொரோனா வைரஸ் பற்றிய வினா விடைத்தொகுப்பு
27. நாட்டில் நிலவும் போதைப்பொருள் பற்றிய விழிப்புணர்வு
28. Reading Makes a perfect man
29. அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம்
30. இளைய சமுதாயத்தில் (போ)பாதை மாற்றம்



# கை கொடுக்கும் கரங்கள்

கைதடி பொது நூலக வாசகர் வட்டத்தினரால் வருடா வருடம் வெளியிட்டு வைக்கப்படும் கரங்கள் சஞ்சிகையானது ஒரு காலத்தின் தேவையாகும். இன்றைய இளம் சந்ததியினர் மத்தியில் வாசிப்பு பழக்கம் அருகிவரும் காலத்தில் வாசிப்பு பழக்கத்தினை கிராமத்தில் பட்டிகள் தொட்டிகள் எல்லாம் எடுத்துச் செல்லும் நோக்கில் கரங்கள் சஞ்சிகையின் தொடர்ச்சியான வருகை என்பது வரவேற்கத்தக்கதாகும். இளம் படைப்பாளிகள் பலரை இச்சமூகத்தில் அடையாளம் கண்டு இவர்களை சமூகத்தின் மத்தியில் அறிமுகப்படுத்தி ஊக்கப்படுத்துவதே இவர்களின் முக்கிய நோக்கமாகும்.

இந்த வகையில் இரண்டு இலக்குகளையும் இணைக்கும் வகையில் புதிய படைப்பாளிகளை அறிமுகப்படுத்தி அதன் ஊடாக புதிய வாசிப்பாளிகளை ஊக்குவித்து அவர்களின் தேவைக்கான தீனி போடும் செயற்பாடாக கரங்கள் சஞ்சிகையின் செயற்பாடு அமைந்திருப்பது பாராட்டுக்குரியதாகும். மாவட்ட மட்டத்திலும் தேசிய மட்டத்திலும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட கரங்கள் சஞ்சிகையானது காலத்தின் தேவையறிந்து கரம் கொடுக்கும் சஞ்சிகையாக பரிணாமம் பெற்று வளர்ந்து பெரு விருட்சமாக வளர எனது வாழ்த்துக்களை வழங்கி விடைபெறுகின்றேன்.

நன்றி

க.வாமதேவன்
தவிசாளர்
பிரதேசசபை கொடிகாமம்

---



# ஆற்றல்களை வளர்க்கும் சஞ்சிகை

கைதடி பொது நூலுகத்தின் வாசகர் வட்டத்தினரால் தேசிய வாசிப்பு மாத நிகழ்வின் ஓர் அங்கமாக கரங்கள் சஞ்சிகை வெளியிடப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே அந்த வகையில் குறித்த சஞ்சிகையின் எட்டாவது இதழுக்கு வாழ்த்து செய்தி வழங்குவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இன்றைய இளஞ்சற்ததியினர் சமூக வலைத்தளங்களில் தமது பெரும் பொழுதைக் கிழித்து வருவதன் விளைவாக நல்ல நூல்களை வாசிப்பதும் எழுத்தாற்றலை வளர்ப்பதும் அருகிவருகின்றது. இதன் தாங்கத்தை இப்பொழுது எமது மொழி ஆர்வலர்கள் உணரத் தொடங்கி உள்ளரை சொல்லவருவதை எழுத்து பிழை இன்றி எழுதவும் தெறிவான மொழி நடையை பயன் படுத்தவும் முடியாது.

தடுமாடுவதையும் மாணவர்கள் மத்தியில் அவதாணிக்க முடிகிறது எனவே காலத்தின் தேவை கருதி இத்தகைய சஞ்சிகைகள், நூல்களை வெளியீடு செய்து இளைய சமுகத்தின் ஆற்றல்களை வளர்க்க தங்களால் எடுக்கப்பட்டு சஞ்சிகை வெளியீட்டு மூயற்சிக்கு எனது மணமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன் கரங்கள் சஞ்சிகை வருடாவருடம் தொடர்ந்து வெளிவரவாழ்த்தி நிற்கிறேன்.

நன்றி

திரு.சி.பவளகுமாரன்
ஓய்வு நிலை அதிபர்



# நூலகரின் உள்த்திலிருந்து….

“கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக”

என்பது வள்ளுவர் வாக்காகும். இதற்கமைவாக மாணவர் மற்றும் இளைஞர் சமுதாயத்தினது அறிவுத்திறனை வாசிப்பின் மூலம் மேம்படுத்தும் முகமாக 2022 அக்டோபர் மாதத்தில் வெளிவரவிருக்கும் “கரங்கள்” சஞ்சிகைக்கு நூலகர் என்ற வகையில் வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெருமிதம் அடைகிறேன்.

தற்போது சமுதாயத்தில் அருகி வரும் வாசிப்பு பழக்கமானது ஓரளவேனும் உயர்வடையும் ஏற்பாடுகளிற்கு இச் சஞ்சிகை வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை.

மேலும் கடந்த காலங்களில் வெளியிடப்பட்டு வருகின்ற “கரங்கள்” சஞ்சிகை வருடந்தோறும் மெருகூட்டப்பட்டு மிளிர்கின்றமை கண்கூடாகும்.

அந்த வகையில் இவ்வருடம் வெளிவருகின்ற “கரங்கள்” சஞ்சிகையும் மென்மேலும் புதுப்பொலிவுடன் மிளிர்வதற்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதுடன். இச் சஞ்சிகை அனைவரது கரங்களிலும் தவழ, உழைத்த அனைத்து பெருமக்களுக்கும் எனது வாழ்த்துக்களையும் நன்றிகளையும் சமர்ப்பிக்கின்றேன்.

வி.மனோகர்
நூலகர்

---



# இதழாசிரியர் உள்ளத்திலிருந்து

“ உடலுக்கு எப்படி உடற் பயிற்சியோ
அதுபோல மனதுக்குப் பயிற்சி புத்தக வாசிப்பு”
-சிக்ண்ட் ஃ ப்ராய்ட்-

வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்துகின்றது. நூல்களும் தொடர் வாசிப்புகளும் மனிதனை புதிய சிந்தனைத் தளத்திற்கு இட்டு செல்வதோடு அறிவார்ந்த சமூக மாற்றத்திற்கும் வித்திடுகின்றன. “ஒரு கோடி ரூபாய் கிடைத்தால் என்ன செய்வீர்கள்?“ என்று கேட்ட போது ஒரு நூலகம் கட்டுவேன்! என மகாத்மா காந்தி கூறியுள்ளார். வாசிப்பதன் மூலம் மொழித்திறன் விருத்தி, சொல்வன்மை, பொது அறிவு வளர்ச்சி, தன்னம்பிக்கை, ஆளுமை விருத்தி, ஞாபகசக்தி, கிரகித்தல் போன்ற திறன்கள் வளர்ச்சி காண்கின்றன.

அந்த வகையில் கைதடிப் பிரதேசத்திலிருக்கின்ற இளையவர்களை வாசிப்பினூடாக வளப்படுத்தும் நோக்கோடு “கரங்கள்” எனும் சஞ்சிகை வாசகர் வட்டத்தினால் ஆண்டு தோறும் வெளியீடு செய்யப்படுகின்றது. அதன் தொடர்ச்சியாக எட்டாவது இதழாக இச்சஞ்சிகை வெளிவருகின்றது. சஞ்சிகையினுள்ளே பொதுவான வாசிப்பிற்குரிய கட்டுரைகள், வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய ஆக்கங்கள், மாயை வாசகர்களின் ஆக்கங்கள் என்பன இடம் பெற்றுள்ளன.

அறிவார்ந்த சமூகத்தின் உருவாக்கத்திற்கு இத்தகைய செயற்பாடுகள் அவசியம் என்பதை வலியுறுத்தி, இச் சஞ்சிகையின் வரவுக்கு ஒத்துழைத்த அனைவர்க்கும் இதழாசிரியர் என்ற வகையில் நன்றிதனைத் தெரிவுத்துக் கொள்கின்றேன்.

“வாசிப்பு வெறும் பொழுதுபோக்கு அல்ல அது ஒரு தவம், ஒரு முறை நாம் வாசிப்பின் சுவையை உணர்ந்து விட்டால் அது நம்மை விடாது”

- இதழாசிரியர்
கே.எம்.செல்வதாஸ் MA in Tamil

என்.செல்வராஜா

# கிராம நூலகங்களும் அவற்றின் சேவைகளும்

1981 ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட இலங்கை குடிசன மதிப்பீட்டின்படி இலங்கையின் மொத்தச் சனத்தொகையில் பாடசாலைக்குச் செல்லாதவர்களின் (எழுத்தறிவற்றவர்கள்) சதவீதம் நகர மட்டத்தில் 8.9% ஆகவும் கிராம மட்டத்தில் 14.5% ஆகவும் காணப்படுகின்றது. அடிப்படைக் கல்வி வசதிகள் கிராமங்களை நோக்கி நகர்த்தப்படுகின்றன. முறைசாராக் கல்வி வசதிகளும் அவ்வாறே நகர்கின்றன. இந்தக் காலகட்டத்தில் கிராம நூலகங்களின் தேவை இன்றியமையாததாகும். நூலகம் ஒரு திறந்த பல்கலைக்கழகம் என்பர். எவருக்கும் அங்கு அறிவைப் பெற்றுக்கொள்ள வசதி ஏற்படுத்தித் தர வேண்டும். இன்று கிராம நகர மக்களிடையே காணப்படும் பொருளாதார, அறிவு ரீதியான ஏற்றத் தாழ்வுகளின் அடிப்படையும் எழுத்தறிவின்மையேயாகும். கிராம நூலகங்களைக் கட்டி எழுப்புவதன் மூலம் இத்தகைய வேறுபாடுகளை ஒழித்து விட முடியும்.

ஓரிடத்தில் பொது நூலகமொன்றினை நிறுவும் போது கவனத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் முக்கிய காரணிகளில் ஒன்று சனத் தொகையாகும். இன்றைய நூலக அமைப்பு முறையில் பெரும்பான்மையான நூலகங்கள் நகரை அண்டிக் காணப்படுவதற்கு காரணமும் இதுவேயாகும்.

நகரத்தில் குறுகிய நிலப்பரப்பில் கூடிய மக்கள் வாழ்கின்றனர். மக்களின் எண்ணிக்கைக்கேற்ப நூலகங்கள் அமைக்கப்படும் போது சனத்தொகை செறிவாகவுள்ள இப்பகுதிகளில் நூலகங்களின் எண்ணிக்கையும் அதிகமாக இருப்பது இயல்பே. கிராமங்களில் சனத்தொகை பரவலாகவும் ஐதாகவும் காணப்படுவதால் நூலகங்களும் குறைவாகவுள்ளன. கிராமங்களில் பொது நூலகங்களுக்கிடையே இடைவெளி அதிகமாகவுள்ளது. இதனால் ஒரு நூலகத்தின் அங்கத்தவர்கள் அதன் சுற்றாடலில் உள்ளவர்களாகவே காணப்படுகின்றனர். அவர்களிலும் சிலர் அருகாமையிலுள்ள கிராம நூலகங்களை விட நகர நூலகங்களையே நாடுகின்றனர். சேவை விரிவாகவும் அதிகமாகவும் நகர நூலகங்களில் வழங்கப்படுவது இதற்குக் காரணமா கலாம்.

மேலே குறிப்பிட்ட குறைபாடுகளால் ஏற்பட்டுள்ள வெற்றிடத்தை கிராம நூலகங்களின் மூலம் நிரப்ப வேண்டும். கிராம நூலகங்களின் தேவை நூலக வசதியற்ற கிராமங்களில் மாத்திரமன்றி நூல்களை நாடும் பழக்கம் குன்றிய மக்களிடமும் வேண்டப்படுகின்றது. மக்கள் நூல்களை நாடாவிடில் நூலகம் மக்களை நாடிச் செல்ல வேண்டும். மக்களை நாடிச் செல்ல ஏற்ற முறையில் கிராம நூலக சேவைகள் திட்டமிடப்படல் வேண்டும்.

இன்று கிராம நூலகங்கள் வழங்கும் சேவைகள் அரைகுறையாகவும் காலத்துக்கேற்ற புதிய சிந்தனைகளின் மூலம் பிறவாதவையாகவும் உள்ளதால் வெறும் வாசிகசாலைகளாகவும் படிப்பகங்களாகவும் காணப்படுகின்றன. பல சனசமூக நிலையங்கள் கிராம நூலகங்களை இயக்குகின்றன. பெரியார்களைக் கௌரவிப்பதற்கென அவர்களது ஞாபகார்த்தமாக ஊர்ப்பெரியவர்கள் கூடி பெரும் விளம்பரங்களுடன் திறந்து வைக்கப்படும் பல நூலகங்களுக்கு விளம்பரப்படுத்தப்படாமலே மூடுவிழாவும் நடந்து விடுவதும் கண்கூடு. இத்தகைய வருந்தத் தக்க நிகழ்வினை நாம் திட்டமிட்டுத் தவிர்த்துக் கொள்ளலாம். ஒரு பெரியாரின் நினைவாக உருவாக்கப்படும் நூலகத்தில் அப்பெரியார் பற்றிய தகவல்கள்

நிச்சயம் இடம்பெற வேண்டும். சில ஞாபகார்த்த நூலகங்களில் அவரின் புகைப்படம் மாத்திரமே ஞாபகார்த்தமாக இருக்கும் பரிதாப நிலை நம் நூலகங்களில் உண்டு.

ஒரு கிராம நூலகத்தில் பின்வரும் சேவைகளை மேற்கொள்ள வேண்டும்.

1. வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவித்தல்

ஒரு கிராம நூலகம் ஆற்ற வேண்டிய பணிகளில் கடினமானதும் அத்தியாவசியமானதும் இதுவாகும். கிராம மட்டத்தில் மக்களின் வாசிப்புப் பழக்கத்தை வளர்க்கும் வகையில் கிராம நூலகங்கள் திட்டமிடப்படல் அவசியமாகும். போக்குவரத்துப் பிரச்சினைகளால் பல கிராமத்தவர்கள் நூலகங்களை நாடுவதில்லை. நூலகங்களில் இயங்கும் படிப்பகங்களில் புதினப் பத்திரிகைகளை வாசித்து உலக நடப்புகளை அறிந்து கொள்வதுடன் அவர்களின் தகவல் தேடுகை முற்றுப் பெற்று விடுகின்றன.

வாசிப்பு பயனுள்ள ஒரு பொழுது போக்காக அமைவது அவசியம். இப்பழக்கத்தை சிறு பராயத்திலிருந்து ஊக்குவிப்பதன் மூலம் வளர்ந்ததும் அவர்கள் தாமாகவே நூலகங்களை நாடிச் செல்ல வழி ஏற்படும். உடல் உள்ளத்திற்கு ஊறு விளைவிக்கும் தீய பொழுது போக்குகளில் ஈடுபடுவதிலிருந்து ஒரு சமுதாயத்தை திசை திருப்புவதற்கு வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பது அவசியமாகும். சிறுவர் இளைஞர் முதியோர் என்று மூன்று மட்டங்களில் இவற்றை மேற் கொள்ளல் வேண்டும். சிறுவர்களுக்குச் சிறு நூல்களை அறிமுகப்படுத்தி அவர்களது வாசிப்பின் ஆர்வத்தை தூண்ட வேண்டும். இளைஞர்களுக்கும் முதியோர்களுக்கும் அவர்களுக்கு ஆர்வத்தை உண்டு பண்ணும் நூல்களைத் தேர்ந்து வழங்கி அவர்களது தொடர் வாசிப்பினை ஊக்குவிக்கலாம்.

மாதர்களுக்குரிய நூல் தேவையினை இரு வகைப்படுத்தலாம். ஒன்று படிப்பறிவுள்ள குடும்பப் பெண்களுக்குரிய இலக்கியம், மற்றும் அவர்கள் கற்ற துறை சார்ந்த நூல்கள், மற்றது, படிப்பறிவு குறைந்த அல்லது வாசிப்பின்பால் நாட்டம் குறைந்த குடும்பப் பெண்களுக்குரிய நூல்கள் இவற்றில் ஜனரஞ்சக நாவல்கள், கவிதை, கட்டுரைகள், சிறு இலக்கிய நூல்கள், இல்லப் பொருளியல் தொடர்பான சுகாதாரம், சமயற்கலை, குழந்தை வளர்ப்பு, இல்லப் பராமரிப்பு போன்ற நூல்கள் சிறு கைத்தொழில் முயற்சிகளை ஊக்குவிக்கும் அறிவியல் நூல்கள் ஆகியவை அடங்கும். முன்னைய பிரிவு நூல்கள் விரும்பிப்படிக்கும் மாதர்கள் ஏற்கனவே கல்வியறிவு கொண்டவர்களாக இருப்பதால் வாசிப்பு பயிற்சியை அவர்களுக்கு ஊட்டவேண்டிய தேவை இராது. இரண்டாவது வகை நூல்களை வாசிக்க வேண்டியவர்களுக்கு நாம் வாசிப்பில் ஆர்வத்தை ஊட்டவேண்டி ஏற்படலாம், கிராமங்களில் பல்வேறு குடும்பப் பொறுப்புக்களுடன் அல்லலுறும் மாதர்களை அணுகி அவர்களது விருப்பத்திற்கும் தேவைக்கும் உரிய துறைகளைத் தெரிந்து கொண்டு அத்துறை சார்ந்த நூல்களை முதலில் வழங்க வேண்டும். கிராமங்களில் இன்று வானொலி தொலைக்காட்சி போன்றவற்றின் அறிமுகத்தினால் வாசிப்பதற்குச் செலவிடும் நேரம் சுருங்கி விட்டது குறிப்பிட்ட வேளைகளில் தொலைக்காட்சிப் பெட்டிகளை மூடிவைத்து பிள்ளைகள் வாசிக்க பெற்றோர் தூண்ட வேண்டியது அவசியம் இதை கிராம நூலகர்கள் வலியுறுத்தி வாசகர்களை கவரும் வழிகளை அறிமுகப்படுத்தலாம்.

2. கிராமம் தொடர்பான வரைபடம், புள்ளி விபரங்கள்

கிராம நூலகம் சார்ந்துள்ள பிரதேசத்தின் விரிவான வரைபடமொன்றைத் தயாரித்து வைத்திருக்க வேண்டும். கிராமத்தின் பிரதான பாதைகள், கோவில்கள், பாடசாலைகள் போன்ற கேந்திர நிலையங்களின் இருப்பிடங்கள் போன்றவை அவற்றில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கிராமத்தின் சனத்தொகை விபரம், மற்றும் விவசாய உற்பத்தி விபரங்களை அவ்வூர்க் கிராம சேவகரிடம் பெற்றுப் பாதுகாத்தல் வேண்டும் இவ்வகையில் ஒவ்வொரு கிராம நூலகமும் பூரணமான ஒரு கிராமத்தகவல் தொடர்பு நிலையமாகப் பணிபுரிய முடியும்.

### 3. கிராமப் பெரியார்களின் வரலாற்றுக் குறிப்புகள்

நமது நாட்டில், சில மனிதர்களால் அவர்கள் பிறந்து வளர்ந்த கிராமம் பெருமை பெறுகின்றது. இத்தகைய பெரியார்கள் தொடர்பான வாழ்க்கைக் குறிப்புகள், அவர்களது சேவை பற்றிப் பத்திரிகைகளில் வெளியான கட்டுரைகள், செய்திகள் போன்றன சேகரித்துப் பாதுகாக்கப்பட வேண்டியவையாகும். இவை போன்ற தகவல்களை நாம் அவர்களது குடும்பத்தவர்களிடம் இருந்து பெற்றுக் கிராம நூலகத்தில் சேகரித்து வரலாம். மூலப் பிரதிகளைப் பெற முடியாத போது, அவற்றின் போட்டோஸ்ரற் பிரதிகளையாவது பெற்று வைக்கலாம், இதனால் ஒரு கிராம நூலகம் சிறந்ததொரு ஆவணக் காப்பகமாகவும் தொழிற்பட வாய்ப்பேற்படுகின்றது. இன்று நம் நாட்டுக்குழைத்த நல்லவர்கள் பலரை மக்கள் நினைவில் வைத்திருக்கின்ற போதிலும் அவர்கள் தொடர்பான விரிவான தகவலைப்பெற முடியாத நிலை பரவலாகக் காணப்படுகின்றது. இந்த நிலைமையைக் கிராம நூலகங்கள் மூலம் மாற்றி அமைக்கலாம்.

### 4. கோவில்கள், புனிதஸ்தலங்கள் பற்றிய வரலாறு

மத வேறுபாடின்றி, ஒரு கிராமத்தில் அமைந்திருக்கும் சகல திருத்தலங்களினதும் வரலாற்றுக் குறிப்பை அக்கிராமத்தில் உள்ள முதியவர்களிடம் கேட்டுக் குறித்து வைத்தல் வேண்டும். கிராமத்தின் பல்வேறு இடங்களுக்கும் வழங்கப்பெற்ற பெயர்களுக்கான கர்ண பரம்பரைக் கதைகள் பல இன்றுண்டு. இவை எழுத்திலல்லாது முதியோர்களின் நெஞ்சிலேயே அதிகமாகக் காணப்படுகின்றது. இவற்றைத் தேடிப்பெற்று, கேட்டுத் தெரிந்து பதிவு செய்து வைத்தல் வேண்டும். ஒரு கிராமத்துக்கு அப்பெயர் வரக்காரணம் என்ன என்பதை பலரும் பல விதமாகக் கூறக் கூடும். அவற்றை கேட்டு எழுதி நூலகத்தில் பாதுகாத்து வைக்கலாம். வரலாற்றுத் துறையினருக்கு அத்தகைய தகவல்கள் பொக்கிஷம் போன்றவை புனிதத் தலங்களின் வரலாற்றுக்கான ஆதாரபூர்வமான புகைப்படங்கள் போன்றவையும் சேகரிக்கப்படலாம்.

### 5. கல்வெட்டுக்கள், சிறப்பு மலர்கள் சேகரித்தல்

ஒரு கிராமத்தைச் சேர்ந்த மக்களின் மரணத்தின் போது நினைவு அஞ்சலிகள், துண்டுப்பிரசுர உருவிலும், நூல் உருவிலும் வெளியிடப்படுவது வழக்கம். அந்தியேட்டி தினத்தன்று பெரும்பாலான இந்துக் குடும்பங்களில் இத்தகைய நினைவு மலர்கள் வெளியிடப்படுவதுண்டு. அவற்றில் மரணமானவரின் வம்சாவழிக் குறிப்பு முக்கியமானதொன்று.

ஒரு கிராமத்தின் அல்லது அயல் கிராமமொன்றில் ஏதேனும் வைபவத்தையொட்டி சிறப்பு மலர்கள் வெளியிடப்படுவதுண்டு. உதாரணமாக, கோயில் கும்பாபிஷேகம், புதிய கட்டிடத் திறப்பு விழா, பாடசாலை வெள்ளிவிழா மற்றும் பொன், வைர விழாக்கள் போன்றவற்றின் போதும் இத்தகு சிறப்பு மலர்கள் வெளியிடப்படுவதுண்டு. இவற்றில் பிரதேச முக்கியத்துவம் வாய்ந்த தரமான கட்டுரைகளும் இருப்பதுண்டு. அநேகமான மலர்கள் குறிப்பிட்ட வைபவத்தின் போது விநியோகிக்கப்பட்டதும் வாசிக்கப்பட்டு விரைவில் மறைந்து விடுகின்றன. அவற்றைச் சேகரித்து ஓரிடப்படுத்தக் கூடிய வசதியை கிராம நூலகங்கள் ஏற்படுத்த வேண்டும். நூலகர் இத்தகைய தொகுப்புகளை தேடிப்பெறும் வழிகளை ஆராய வேண்டும்.

### 6. பத்திரிகை வெட்டுத் துண்டுகளைச் சேகரித்தல்

ஒரு கிராமத்தைப் பற்றிய தகவல்கள் செய்தி உருவிலோ கட்டுரை வடிவிலோ வெளிவந்திருக்கக் கூடும். கிராமம் தொடர்பாக வெளி வரும் சகல தகவல்களையும் பத்திரிகைகளிலிருந்து வெட்டி எடுத்து ஒரு கொப்பியில் ஒட்டி வைத்துச் சேகரித்தால் பின்னர் தேவைப்படும் போது உபயோகிக்கலாம். வெட்டி எடுக்கும் தகவல்களுடன் அவை எந்தப் பத்திரிகைகளில் அல்லது சஞ்சிகையில் வெட்டி எடுக்கப்பட்டதென்பதையும் என்ன திகதியில், எத்தனையாம் பக்கத்தில் அந்தச் செய்தி அல்லது கட்டுரை வெளிவந்ததென்றும் தவறாமல் குறிப்பிடல் வேண்டும். இக்குறிப்பு மிக முக்கியமானதொன்றாகும். இவ்வெட்டுத்துண்டுகளை ஒட்டி வைப் பதை விட கோவைகளில் பாடவாரியாக இட்டுத் தொகுப்பதையும் சில நூலகங்களில் அவதானிக்க முடிகிறது.

7. கருத்தரங்குகள் வாசகர் வட்டங்கள் நூல்விமர்சனக் கூட்டங்கள்

கிராம மட்டத்தில் சிறிய அளவில் கருத்தரங்குகளை ஒழுங்கு செய்யலாம். கிராமத்தின் அன்றாடத் தேவை தொடர்பான தகவலை மக்கள் பெற்றுக் கொள்ளும் வகையில் அத்துறையுடன் தொடர்புள்ள ஒருவரை அழைத்து அதைப்பற்றிப் பேசச் சொல்லி மக்களின் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய உதவலாம். அத்துடன் கிராம மக்களில் படித்தவர்களை வாசகர் வட்டம் என்ற பெயரில் ஒன்று கூட்டி, சிறிய அளவில் கலந்துரையாடல்களை ஒழுங்கு செய்யலாம். இத்தகைய கலந்துரையாடல்களால் புரிந்துணர்வும் தோழமையும் ஒன்றைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆவலும், அறிவினைப் பகிர்ந்து கொள்ளும் வாய்ப்பும் மக்களுக்கு ஏற்படும்.

நூல் விமர்சனக் கூட்டங்கள் என்ற வகையில் அறிஞர்களை, கிராமத்திலுள்ள கற்றோரை அழைத்து புதிய நூல்களை அவர்கள் மூலம் அறிமுகம் செய்து அந்த நூலின்பால் மக்களின் கவனத்தை ஈர்க்க முயற்சி செய்ய வேண்டும். மின்சார வசதியுள்ள நூலகங்களில் காலத்துக்குக்காலம் தரமான கலைநுணுக்கம் மிக்க திரைப்படங்கள், அறிவியல் திரைப்படங்கள் போன்றவற்றைக் காட்ட ஒழுங்கு செய்யலாம். இத்தகைய வேலைத்திட்டங்கள் மக்களை நூலகத்தின் பால் கவர வழி ஏற்படுத்தும்.

8. சிறுவர் பிரிவினை அமைத்தல்

சிறுவர்களின் அறிவியல் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில் ஒவ்வொரு கிராம நூலகமும் அதிக அக்கறையுடன் செயற்றிட்டங்களை வகுக்க வேண்டும். இன்றைய சிறுவர்களே நாளைய மனிதர்கள், கிராமத்தை மட்டுமல்ல நாட்டையே வழி நடத்த வேண்டிய பொறுப்பு அவர்களுக்குண்டு. அவர்களை ஊக்குவித்து அரிய நூல்களை அவர்களுக்கு அறிமுகஞ் செய்து வாசிப்பின்பால் ஆர்வத்தினை ஏற்படுத்தி விட்டால் எதிர் காலத்தில் சிறந்த வாசகர்களாக அவர்கள் திகழ்வர், அறிவுத்துறை என்ற ஏணியின் முதல் அடியை அவர்கள் கிராம நூலகத்திலேயே வைக்க வேண்டும்.

சிறந்த வழிகாட்டல்களைச் சிறுவர்களுக்கு அளித்து அவர்களது மனதைப் பக்குவப்படுத்தக்கூடிய வகையில் சிறுவர் நூலகங்கள் அமைப்பதுடன் மட்டும் நில்லாது. அவர்களுக்கு பிடித்தமான கதை நேரங்களையும் ஒழுங்கு செய்து ஒருசிறுவர் பள்ளி ஆசிரியை அல்லது பெரியார்கள் மூலம் வாராந்தம் நல்ல கதைகளைச் சிறுவர்களுக்குக் கூற வைக்கலாம்.

பத்திரிகைகளில் வெளிவரும் சிறுவர் பகுதிகளை வெட்டி எடுத்து கிராம நூலகத்தில் ஓரிடத்தில் ஓட்டிவைக்கலாம். இதை அன்றாடம் சிறுவர்கள் வாசிக்கக் கூடிய இடத்திலும் பொருத்தமான உயரத்திலும் வைப்பதன் மூலம் அவர்கள் பயன்பெற வழி அமைக்கலாம். எழுத்தாற்றல் உள்ள சிறுவர்களைக் கொண்டு சிறுகதைகள், கட்டுரை, கவிதை போன்றவற்றையும் அவர்கள் வாசித்தறிந்த துணுக்குச் செய்திகளையும் எழுதுவித்து இத்தகைய சுவர்ப்பத்திரிகைகளில் சேர்க்கலாம். இவற்றின் படிமுறை வளர்ச்சியாகப் பின்னர் சிறுவர்கள் "கையெழுத்துப் பத்திரிகைகளை" நடாத்தத் தூண்டலாம்.

வேதநாயகம் தபேந்திரன்
B.Com (Jaf), PGD.PDS ( Jaf), M A in Development Studies ( Jaf )
ஓய்வு பெற்ற மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர் - கிளிநொச்சி

# வாசிப்பும் மனித வாழ்வின் உயர்வுகளும்

நண்பனொருவனைத் தேடிச் சென்றேன். வீட்டில் அவன் இல்லை. அவர் இலந்தைக்குழை வெட்டப் போனவர் இன்ன இடத்தில் பாருங்கோ நிற்பாரென மனைவி குறிப்புச் சொன்னார். போனேன் .சந்தித்தேன்.
என்ன மச்சான் இலந்தைக் குழையோட மினக்கெடுறாய். என்ன தேவைக்காக எனக் கேட்டேன்.
என்ர ஆடு ஒன்றுக்கு வயிற்றுளைவு . அதனால் தான் இலந்தைக் குழை வெட்டித் தீவனமாகப் போடுவன். வயிற்றுளைவு மாறி விடும் என்றான்.
இதெல்லாம் யார் உனக்குச் சொல்லித் தந்தது எனக் கேட்டேன்.
பத்திரிகை ஒன்றில் வாசித்துத் தெரிந்து கொண்டேன். முன்பும் சில முறை ஆடுகளுக்கு இலந்தைக் குழை போட்டுச் சுகம் கண்டேன் என்றான்.
வாசிப்பு என்பது மனிதர்களைப் பல துறைகள் தொடர்பான அறிவைத் தருகின்றது. வாசிப்பு மனிதனைப் பூரணமாக்கும் என முதுமொழி சொல்கிறது.
வாசிப்புப் பழக்கத்தைத் தொலைத்த சமூகம் அறிவைத் தொலைத்த சமூகமாகவே இருக்கும்.
இன்றைய நாளில் கூகுல் படிப்பில் தான் பல மாணவர்களும் இளைய தலைமுறையினரும் நேரத்தைச் செலவிடுகின்றனர். ஆனால் புத்தக வாசிப்பிலோ, பத்திரிகை வாசிப்பிலோ ,சஞ்சிகை வாசிப்பிலோ நேரத்தைச் செலவிடுவோர் தொகை குறைவாகவே உள்ளது.
வாசிப்புத் தாகம் குறைந்த தலைமுறையொன்றைக் கண் முன்னால் காண்கின்றோம். வாசிப்புப் பழக்கம் குறைந்து போய் விட்தென ஒற்றைச் சொல்லுடன் விட்டு விட்டுப் போக முடியாது.
இன்றைய தலைமுறைக்கு எது பிடிக்குமென அறிந்து அதனூடாக வாசிப்பை ஊட்ட வேண்டும்.
ஒரு காலத்தில் கிறிக்கெற்றில் 5 நாள் உள்ள ரெஸ்ற் விளையாட்டைப் பொறுமையாக விரும்பிப் பார்த்தார்கள்.
அது பின்னாளில் 60 ஓவர் உள்ள விளையாட்டு ரசனையாக மாறியது. அதன் பின்னர் 50 ஓவர் உள்ள விளையாட்டின் மீதான ரசனையாக மாறியது.
அண்மைக் காலத்தில் ருவென்ரி ருவென்ரி என இருபதுக்கு இருபது ஓவர் விளையாட்டாக மாறி நிற்கின்றது.
இது போலத் தான் நாமும் பெரிய பெரிய புத்தகங்கள், ஆக்கங்களைக் கொடுத்து வாசிப்புப் பழக்கத்தை ஊட்டாமல் சிறிய சிறிய ஆக்கங்களின் ஊடாக  மாணவர்களை இளைய சமூகத்தை வாசிப்பின் பக்கம் திருப்ப வேண்டும்.
அதிலும் அவர்களைக் கவரக் கூடிய படங்களை இணைத்து ஆக்கங்களைத் தயாரித்தால் விரும்பி வாசிப்பார்கள்.
எமது தலைமுறைக் காலத்தில் அம்புலிமாமா , ராணி காமிக்ஸ் போன்ற கதைப் புத்தகங்களை போதை வஸ்துப் போல வாசித்தோம். பாடக் கொப்பி, புத்தகத்தில் ஒளித்து ஒளித்து வைத்து வாசித்து அடி வாங்கிய அனுபவங்களும் உண்டு.
அது போன்றதொரு வாசிப்புப் போதைவஸ்தை மாணவர்களுக்குக் கொடுக்க வேண்டும். பாடசாலை,ரியூசன் என்ற இறுக்கமான இரு விசைகளுக்குள் மாணவர்கள் சிக்கித் தவிக்கும் போது வாசிப்புப் பழக்கத்திற்கு நேரம் ஏது ?
சில பாடசாலைகளில் தமிழ்ப் பாட ஆசிரியர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் மாணவர்கள் நாளாந்தப்

பத்திரிகைகள் வாசிப்பதை ஊக்குவித்துப் பத்திரிகைச் செய்திகள் தொடர்பான விடயங்களைக் கேள்விகளாகக் கேட்டுப் பரிசளிப்பார்கள். அது போல புத்தகங்களை ஒரு சுற்றோட்டத்தில் வாசிக்கக் கொடுத்து அப் புத்தகத்தில் உள்ள விடயங்கள் எவையெனக் கேட்டுப் பரிசளிப்பார்கள். பரிசுப் பொருள் என்பது பெரியதொரு பெறுமதியில் இருக்க வேண்டுமென்பதில்லை. ஒரு பேனா அல்லது பென்சில் அல்லது சிறு கொப்பியாகக் கூட இருக்கலாம். ஆனால் தனது சக மாணவர்களின் கைதட்டல்களுக்கு மத்தியில் தனது ஆசிரியர் தந்த பரிசு என ஏற்றிப் போற்றி மதிப்பார்கள். நாலு பேருக்குக் காட்டித் தமது வெற்றியை மகிழ்வார்கள். இது போன்ற உளவியல் ஊடாக மாணவர்களுக்கு வாசிப்புத் தாகத்தை ஊட்டும் ஆசிரியர்கள் சிலரை அறிவேன்.

அரச ஊழியம் என்பது மாதா மாதம் பெறும் சம்பளத்திற்கானது அல்ல. கடமை நேரத்தில் கருத்தூன்றி விசுவாசமாக இருந்து பாருங்கள் மாணவர்கள் மத்தியில் எத்தனை எத்தனையோ நல்ல விளைவுகளை உருவாக்கலாம். முன்னைய காலத்தில் கிடுகுக் கொட்டிலில் சனசமூக நிலையங்கள் இருந்த போது இருந்த வாசிப்புத் தாகம் இன்று மாட மாளிகை போல கட்டிடங்கள் வந்த போது இல்லை. அது எவ்வாறு விலகிப் போனது. திறன்தொலைபேசிகளின் வருகையே இதற்குப் பிரதான காரணமெனலாம். மலிவு விலையில் இணையப் பாவனையை வழங்குவதற்குப் போட்டி போட்டுக் கொண்டு அலைபேசி நிறுவனங்கள் நிற்பதுவும் பிரதான காரணம். இவற்றுக்கு இடையே பொருத்தமான சமநிலையைக் கண்டு பிடிக்கா விட்டால் வாசிப்பைத் தொலைத்து அதனூடாக திறன்களைத் தொலைத்த சமூகம் ஒன்றைத் தான் காணப் போகின்றோம்.

வாசிப்பு மாதம் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதம் உள்ளூராட்சி சபைகளால் கொண்டாடப்படுகின்றது. இக் காலத்தில் வாசிப்பை மேம்படுத்தும் முயற்சிகள் பல செய்யப்படுகின்றன. இம் முயற்சிகள் ஏனைய 11 மாதங்களுக்கும் தொடரக் கூடியதாக வேலைத் திட்டங்கள் வகுக்கப்படல் வேண்டும்.

பாடசாலைகளின் நேர அட்டவணையில் ஒவ்வொரு நாளும் ஒரு பாடம் நூலகப் பயன்பாட்டிற்கென ஒதுக்கப்படல் வேண்டும். சின்னன் சின்னனாக வாசிக்க ஆரம்பித்த ஒருவர் நாளடையில் பெரிது பெரிதாக வாசிக்கத் தொடங்கி விடுவார். வாசிப்புப் பழக்கம் தன்னாலேயே உருவாகி விடும்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்கள் தொடர்பாக அவதானித்து உள்ளேன். பத்திரிகைகள் வாசிப்பில் நாட்டமுள்ள மாணவர்கள் மாறுபட்ட கேள்விகளுக்கு விடையளித்து உயர் புள்ளிகளைப் பெற்றுள்ளார்கள்.

வாசிப்பின் தொடர் பழக்க வழக்கம் உள்ளவர்கள் தான் அரசாங்கத்தின் பதவிகளுக்கான போட்டிப் பரீட்சைகளில் உயர் புள்ளிகளைப் பெற்று உயர் பதவிகளை வகித்துள்ளார்கள். கருத்தூன்றி வாசித்துப் பழகுபவர்களுக்கே கிரகித்தல் திறன் உயர்வாக இருக்கும். இந்தக் கிரகித்தல் திறன் ஊடாகப் பல பரீட்சைகளை வெற்றிகரமாக எதிர் கொள்ள முடிகிறது.

அச்சடித்த தாளின் ஊடான வாசிப்பு வன்பிரதி வாசிப்பாக இருக்கும்.

அது போல இணையவழி வாசிப்பு மென்பிரதி வாசிப்பாக இருக்கும்.

இன்று இம் மென்பிரதி இணைய வாசிப்பு என்ற புதியதொரு வாசிப்புப் பண்பாடும் முதன்மை பெற்றுள்ளது. இணையம் பரந்து விரிந்த உலகத்தை உள்ளங் கைகளுக்குள் உள் வீட்டினுள் கொண்டு வந்து விட்டது. அதன் ஊடாகவும் வாசிப்பை மேற்கொள்ளலாம். ஆனால் இணையங்களில் பதிவேற்றம் செய்யப்படும் தகவல்கள் எத்துணை தூரம் உண்மையானவை என்பது சந்தேகத்திற்குரியவை . அதனால் இணைய வாசிப்பில் நம்பகத் தன்மை மிக்கவை எவையென்ற கேள்வி எழுகின்றது.

தவறான விடயங்களை வாசிப்பின் ஊடாகக் கற்றால் தவறான வாழ்க்கை முறையொன்றினுள் சென்று விடுவோம். ஆகவே நம்பகத்தன்மை வாய்ந்த இணையவழிகளின் ஊடாகவே இணைய வாசிப்பை மேற்கொள்ள வேண்டும்.

கே.எம்.செல்வதாஸ்

# வாழ்க்கைக்கு வழிகாட்டும் இலக்கியச் செய்திகள்

அ. அன்பினால் அகிலத்தை வெல்வோம்

"அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ் ஆர்வலர்
புன் கண்ணீர் பூசல் தரும்"

என்பது வள்ளுவன் வாக்கு. இவ்வுலக வாழ்வில் அன்பு என்னும் உணர்வு அற்புதமானது. அந்த அன்பு ஒருவரது உள்ளத்திலிருந்து உண்மையாக ஊற்றெடுக்கின்ற வேளைதனில் அதற்கு நிகராக இவ்வுலகில் எதுவுமே இருந்துவிடப் போவதில்லை. வாழ்வு இன்பகரமானதாக இருக்க வேண்டுமானால் உண்மை அன்பினை நாம் பகிர்ந்திடல் வேண்டும். அன்பு என்பது மிகவும் வலிமைமிகு ஆயதம். அதனை சரியான முறையில் நாம் வெளிப்படுத்துவோமாக இருந்தால் அகிலத்தையும் எம்மால் வென்றுவிட முடியும்.

யானையின் உடலில் பாய்ந்து செல்லும் அம்பானது பஞ்சுக் குவியலிலே பாய்ந்து செல்லாது. அது போல வன்மையான சொற்களால் வெல்லமுடியாத பல விடயங்களை மென்மையான சொற்களால் வென்றுவிட முடியும். இந்த உலகத்தைச் செலுத்தும் சக்தி அன்புக்கு மட்டுமே உண்டு. அன்பு எந்த அடைக்கப்பட்ட கதவையும் திறக்கும் சாவி போன்றது.

"நான் அன்பையே பற்றிக் கொள்ள
விரும்புகிறேன் வெறுப்பு என்பது
ஒரு பெரும் சுமை..."

என்பது மார்ட்டின் லூதர் கிங்கின் அனுபவ மொழி.

மனிதனின் பகுத்தறிவினால் வளர்ந்த விஞ்ஞானம் போன்று மெய்யறிவினால் அன்பு வளர வேண்டும். தனிமனித வாழ்வின் உயர்விற்கும் உலகத்தின் உயர்விற்கும் ஒரே தீர்வு அன்பு தான் இவ்வுல கெங்கும் அன்பு மயமாக வேண்டும் அதற்கு இப்பிரபஞ்சம் எப்போதும் தயாராக உள்ளது. உடல் நலம், மனநலம், அற்புதமான உறவுகள், நேசிக்கும் வேலை, மகிழ்ச்சி பொங்கும் வாழ்க்கை என்ற அனைத்துமே அன்பினில் அடங்கும், நாம் நினைப்பதைக் காட்டிலும் அற்புதமான வாழ்க்கையை அன்பு கொண்டு வரும். இதை யாவரும் உணர்ந்து விட்டால் மனித இனத்திற்கு எந்தத் தொல்லையும் வராது. எதையாவது உருவாக்க வேண்டுமென்றாலும் எதையாவது மாற்ற வேண்டுமென்றாலும் அதை அன்பின் அடிப்படையில் செய்தால் அது நிச்சயம் நடக்கும். அது தான் அன்பின் சக்தி.

ஆ. நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி

இவ்வுலகில் நாம் வாழ்வாங்கு வாழ்வதற்கு தேவையான அறக்கருத்துகளை போதிப்பனவாக நீதிப்பாடல்கள் காணப்படுகின்றன. தமிழ் இலக்கியப்பரப்பில் காலத்திற்கு காலம் பல நீதி நூல்கள் தோன்றி நல்லறிவுரைகளைப் போதித்த வண்ணமே இருக்கின்றன. அவ்வகையில் நீதி நெறிகளைக் கூறுவதில் திருக்குறளும் நாலடியாரும் உன்னதமான இடத்தைப் பெற்ற படைப்புகளாகக் காணப்படுகின்றன. நீதிக் கருத்துக்களை கூறுவதில் திருக்குறளும் நாலடியாரும் ஒரே முறையினையே பின்பற்றுகின்றன.

ஒரு நாட்டின் பண்பாட்டினை உணர்த்துவனவாக பண்டைய இலக்கியங்கள் காணப்படுகின்றன. அவற்றிலும் வள்ளுவர் பெருமான் அருளிய திருக்குறள் வாழ்வினை நெறிப்படுத்தி வளமார்ந்த நன்நிலைக்கு

நம்மை அழைத்துச் செல்வதாகக் காணப்படுகின்றது. இதனைக் கருத்திற்கொண்டே

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தி
குறுகத் தறித்த குறள்..."

என ஔவையார் திருக்குறளைச் சிறப்பித்துள்ளார். திருக்குறலிலும் நாலடியாரிலும் முப்பாலில் மொழிந்துள்ள வற்றாத கருத்துக்கள் மனித சமுதாயத்தைச் சீர் திருத்தும் செம்மை நலம் சார்ந்தனவாகக் காணப்படுகின்றன. அறத்துப்பால் வாழ்க்கை நெறியினையும் பொருட்பால் நாட்டு நடப்பினையும் இன்பத்துப்பால் இனிய வீட்டு வாழ்வினையும் தெளிவுற எமக்கு உணர்த்தி நிற்கின்றன.

"இன்னா செய்தாரை யொறுத்தல் அவர் நாண
நன்னயஞ் செய்து விடல்..."

என்பது வள்ளுவர் வாய்மொழி. மனிதப் பண்புகள் நிறைந்த சான்றோர்கள் துன்பம் செய்தவர்க்கும் இனிய உதவிகளையே செய்வர் என்று கூறி நம்மையெல்லாம் மாமனிதராக வாழுமாறு வள்ளுவர் வேண்டுகின்றார்.

"பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்
வரிசை வரிசையாய் நந்தும் – வரிசையாய்
வானூர் மதியம் போல் வைகலும் தேயுமே
தானே சிறியார் தொடர்பு..."

என்கின்றது நாலடியார். இவ்வாறான பல அரிய கருத்துக்களை தம்மிடத்தே கொண்டு தமிழுக்கு பெருமை சேர்க்கும் நாலாகிய நாலடியாரும் இரண்டாகிய திருக்குறளும் என்றும் தமிழ் மொழிக்கு உறுதி பயக்கும் என்பது திண்ணம்.

### இ. யாதும் ஊரே யாவரும் கேளிர்

"யாதும் ஊரே யாவரும் கேளிர்..." என்பது கணியன் பூங்குன்றனாரின் கூற்று. இந்த உலகம் முழுவதையும் ஒரு குடும்பமாகக் காணவேண்டும் என இதனூடாக வலியுறுத்தியுள்ளார். மனித குலம் முழுவதையும் ஒன்றாகக் கண்ட அவர்தம் விரிந்த பரந்த உள்ளம் இதில் புலனாகின்றது. ஔவையார் இது பற்றிக் குறிப்பிடுகையில்

"எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே."

என்று அழகாகக் கூறியுள்ளார். ரிக் வேதத்தில் உலகத்திலுள்ள அனைவருக்கும், விலங்குகள், பறவைகள் போன்ற எல்லா உயிரினங்களுக்கும் மங்கலமும் நன்மையும் ஏற்பட வேண்டும் என்றவாறாக சமுதாய ஒற்றுமைக்கு அடிக்கல்லாக விளங்குகின்ற மந்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

சமூகத்தில் ஒற்றுமையுடன் அனைவரும் சேர்ந்து இருக்க வேண்டும் என்னும் எண்ணம் ஒவ்வொருவருக்கும் வரவேண்டும். நான் என்பதைச் சற்றே விரிவுபடுத்தி நாம் என்று கூறும் எண்ணம் வளர வேண்டும். அவ்வாறான சிந்தனை ஒவ்வொருவரிடத்திலும் ஏற்படுமிடத்து சாந்தியும் சமாதானமும் நிறைந்த அழகிய ஒரு உலகை சிருஷ்டிக்க முடியும்.

### ஈ. எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது

இந்த உலகில் தோன்றிய அத்தனை உயிரிகளும் தனித்திறமை வாய்ந்தனவே. தம்மை நிலை நிறுத்தி வாழும் பொருட்டாக அவை யாவுமே இடையறாது இயங்கிக் கொண்டிருக்கின்றன. அவ்வாறான வாழ்தலிலே உயர்வு தாழ்வு என்ற பேதம் அர்த்தமற்றதாகவே காணப்படுகின்றது. உயிரிகளில் உயர்ந்ததுமில்லை தாழ்ந்ததும் இல்லை யாவும் சமமே. இதனையே வள்ளுவப் பெருந்தகை.

"பிறப் பொக்கும் எல்லா உயிர்கட்கும்"

என்று பாடியுள்ளார். இத்தகு உயிரிகளில் மனிதன் ஆறறிவு எனும் திறன் பெற்று எதையும் பகுத்தறியும்

சிந்தனாசக்தி கொண்டவனாகக் காணப்படுகின்றான். இருந்தும் பிற உயிரினங்களைக் காட்டிலும் அதீத பேதங்களை மனித குலமே காட்டிக் கொண்டிருக்கின்றது. இந்த உலகை விசால மனங்கொண்டு பார்த்தால் அந்த அற்பத்தனங்கள் கானல் நீராகி மறைந்து போய்விடும். இந்த உலகில் வாழும் உயிரினங்கள் யாவுமே ஏதோவொரு விடயத்தில் ஆற்றல் பொருந்தியனவாகவே காணப்படுகின்றன. இதனை ஔவையின் பாடலொன்று தெளிவுறுத்தி நிற்கின்றது.

"வான் குருவியின் கூடு வல்லரக்கு தொல் கறையான்
தேன் சிலம்பி யாவர்க்கும் செய்யரிதால் யாம் பெரிது
வல்லோமே என்று வலிமை சொல வேண்டாங்கான்
எல்லோர்க்கும் ஒவ்வொன்று எளிது"

எனும் பாடலடிகள் சான்று பகருகின்றன. தூக்கணாங் குருவியின் கூடு பார்ப்பதற்கு மிக அழகானது. நுண்ணிய இழைகளைக் கொண்டு அதனை நேர்த்தியாக வடிவமைத்தது சிறிய குருவியே. அது போல அரக்குப் பூச்சியே வலிமை மிகு அரக்கை உற்பத்தி செய்கின்றது. கறையான் கட்டும் வீடு மிகவும் செய் நேர்த்தியானது. தனித்த அறைகளென ஒவ்வொரு விடயத்தையும் பார்த்துப் பார்த்து வடிவமைத்த வீட்டுக்குக் காரண கர்த்தா கறையானே. சுரக்கும் தேனைச் சேமிப்பதற்காகவும் குடி கொண்டு வாழ்வதற்காகவும் தேன் குழவி கட்டும் கூட்டையும் சிலந்தி தன் உமிழ்நீரினால் கட்டுகின்ற சிக்கல்மிகு சிலந்தி வலைப்பின்னலையும் வெறும் வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. அது அவற்றுக்கே உரித்தான தனித்த ஆற்றல். இத்தனைக்கும் எந்த ஆர்ப்பரிப்புமின்றி அவை அமைதியாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றன.

மனித குலத்திலிருக்கின்ற நவீன கண்டுபிடிப்புச் சாதனங்களைக் கொண்டு கூட இத்தகு கட்டுமாணங்களை நிர்மாணித்துவிட முடியாது. ஆதலால் நாம் தான் வலிமையானவர்கள் வல்லவர்கள் என்று பெருமை பாராட்டுவதை விடுத்து உலகில் தோன்றிய அனைத்து உயிர்களுக்கும் ஒவ்வொன்று எளிது என்ற உண்மையை உணர்ந்து கொள்ள வேண்டும். அந்த உண்மையை உணர்ந்து கொள்ளும் பட்சத்தில் மனிதகுலத்தைப் பீடித்திருக்கும் ஏற்றத்தாழ்வு எனும் கொடியநோய் இல்லாது அகன்று விடும்.

சி.சந்திரகுமார்

# மாணவரின் கல்வி மற்றும் நல்வாழ்வுக்கு உறுதுணையாகும் வாசிப்புப் பழக்கம்

ஒரு மாணவனின் கற்றற் செயன்முறைக்கு அடித்தளமாக அமைவது வாசிப்பாகும். வாசிப்புத் தொடர்பாக உடன்பாடான மனப்பாங்கை மாணவர்களிடையே ஏற்படுத்துவது என்பது மொழி, ஆசிரியர்கள் மட்டுமன்றி எல்லா ஆசிரியர்களும் எதிர்கொள்ளும் மிகவும் கடினமான பணியாகும். இன்றைய மொழியாசிரியர்கள் கூட பிள்ளைகளிடம் வாசிப்பை ஊக்குவிப்பதற்கு பல இடர்பாடுகளை எதிர்நோக்கி வருகின்றனர். அதற்குக் காரணம், எமது சமூகத்தினரிடையே உட்புகுந்திருக்கும் அதிநவீன தொழிநுட்ப மாயை ஆகும். அதன் காரணமாகவே இன்றைய இளம் பராயத்தினரின் கைகளில் நவீன தொடுதிரை பேசிகளும், தொலைக்காட்சிகளும் இணைய வசதிகளோடு கூடிய தொழில் நுட்ப சாதனங்களும் காணப்படுகின்றன. இவற்றுக்கு அடிமையாகிய நிலையில் எம்பிள்ளைகள் காணப்படுகின்றனர். இந்த நிலை காரணமாகவே இன்றைய பிள்ளைகள் வாசிப்புத் திறனை விருத்தி செய்யமுடியாதிருக்கின்றனர்.

இந்தத் தாக்கத்தின் காரணமாகவே எமது மாகாண மாணவர்களின் அடைவுமட்டம் குறைவான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அண்மைய பரீட்சை முடிவுகள் சுட்டிக்காட்டி நிற்கின்றன. அத்தோடு மட்டுமன்றி இன்றைய மாணவர்களின் வாசிப்பு என்பது பாட நூல்களுக்குள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றது. அதற்கு எமது நாட்டுக் கல்விக்கொள்கையும் உறுதுணையாகிச் செயற்படுவது வேடிக்கையானதே. அதற்குச் சான்றாக பின்வரும் விடயங்களைச் சுட்டிக்காட்ட முடியும்.

எமது நாட்டின் கல்வி முறைமை முழுக்க முழுக்கப் பரீட்சையை நோக்காகக் கொண்டது. அத்தோடு இன்றைய பெற்றோர்களின் மன நிலையில் ஏற்பட்ட மாற்றம். பிள்ளைகளின் பாடசாலைக் கல்வியில் முழு நம்பிக்கை கொள்ளாது பிரத்தியேக வகுப்புக்களுக்குப் பிள்ளைகளை அனுப்புகின்றனர். இரவில் வீடுகளில் தனிப்பட்ட வகுப்புக்களும் இடம்பெற்று மாணவர்களை சுயமாக இயங்கவிடாது தடுக்கின்றன. செயற்கை முறையான கற்றல்முறை காரணமாக வாசிப்புப் பழக்கமானது அருகிப் போவதை அவதானிக்க முடிகின்றது. இந்த நிலமைகள் மாற்றியமைக்கப்பட வேண்டிய நிலையில் சமூக மாற்றம் ஒன்று ஏற்படவேண்டும் என்பது எனது கருத்து.

இந்தச் சமூக மாற்றத்துக்கும் மொழி விருத்திக்கும் பாடசாலை மட்டத்தில் மட்டுமன்றி குடும்பச் சூழலிலும் முன்பள்ளி நிலையங்களிலும் பல்வேறு வாசிப்பு நிகழ்ச்சித் திட்டங்களைத் துரிதமாக அறிமுகப்படுத்தி, செயற்படுத்துவதனூடாகவே மாணவர்கள் தமது வாழ்க்கைக்கு தேவையான அத்தியாவசியமான அடிப்படை மொழித்திறன்களை பெற்றுக் கொள்ளச் செய்யலாம். இதற்கு இளம் பருவத்தினராகிய மாணவர்கள் விரும்பக்கூடிய வகையில், அவர்தம் அறிவுக் கேற்ற நூல்களையும், சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும், ஏனைய சமய விழுமிய நூல்களையும் பல்வர்ணங்களில் வழங்குவதனூடாக இந்த வாசிப்பு பழக்கத்தை மேம்படுத்திக் கொள்ளமுடியும்.

பிள்ளைகளின் பெற்றோர்களும், முன் பள்ளி ஆசிரியர்களும், பங்குதாரர்களாக மாறவேண்டும். தமது வீடுகளில் சிறிய மாதிரி நூலகம் அமைத்து, அதில் நூல்களைச் சேகரித்துப் பிள்ளைகளுக்கு வழங்கமுடியும்.

சிறுபராயம் தொடக்கம் கடைகளில் திண் பண்டங்களையும் விளையாட்டு, பொருள்களையும் வாங்குவதைக் கட்டுப்படுத்தி, அதற்குப் பதிலாக பல நூல்களைக்கொள்வனவு செய்து, வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் பிள்ளைகளைப் பழக்கிக்கொள்ளுதல் வேண்டும்.

இவ்வாறு பழக்கத்துடன் வரும் பிள்ளைகள் பாடசாலைகளில் இடைநிலை, உயர் வகுப்புக்களில் தம் ஒப்படைகளைத் தாமே தரவுகளைச் சேகரித்துச் செய்வதற்கும், தமது அறிவைவிருத்தி செய்வதற்கும் இயலுமான நிலையில் பழக்கப்பட்டிப்பார்கள் என்பதில் ஐயமில்லை .

தெல்லியூர்த்தேவி

# வாழ்வைச் சிறப்பாக்கும் நேர முகாமைத்துவம்

நேரம் என்பது கிடைத்தற்கரிய அபூர்வமான ஒருவாய்ப்பு. அதைச் சரியாகப் பயன்படுத்தி அதிஉச்சப்பயனைப்பெற்றவர்கள் சிறப்புடனும் புகழுடனும் வாழ்ந்ததைச் சரித்திரங்கள் கூறுகின்றன. இந்த நேரத்தை தற்காலத்தில் வீணாகக் கரைத்துக் கொண்டிருக்கிறார்கள் வேலையின்றி வெட்டிப் பேச்சில் ஈடுபடும் வழக்கமுள்ளோர். நேரத்தை அழுகும் பொருள் perishoble commo dity என்று வர்ணித்துள்ளார் ஒரு மேல் நாட்டு அறிஞர். பலரது வாழ்வில் இது திறந்து வைக்கப்பட்ட கற்பூரமாய் எதுவித பயனும் இன்றிக் கரைந்து கொண்டிருக்கிறது. இந்த உண்மையை நாங்கள் ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். மிகவும் விவரமானவன் நான் என்று பெருமை பேசுபவர்கள் கூட நேரத்தைக் கையாள்வதில் சித்தியெய்துவதில்லை.

மனிதரிடத்தில் பொருளாதாரத்திலும் உடல் நலத்திலும் எவ்வளவு பாகுபாடுகள் இருந்தாலும், நேர விடயத்தில் மட்டும்பாகுபாடு இருப்பதில்லை. எல்லோருக்கும் 24 மணிநேரமே இயற்கை வழங்கு கின்றது. ஒரு வினாடி கூடக் கூடுவதும் இல்லை குறைவதுமில்லை. ஆனால் இந்த 24 மணித்தியாலத்தையும் மனிதன் எவ்வாறு எந்த வழிகளில் பிரயோசனப்படுத்துகிறான் என்பதிலேயே அவனது மானிட வாழ்க்கையின் சிறப்பியல்புகள் அமைந்து விடுகின்றன.

நேரத்தைச் சரியாகப் பயன்படுத்தாமையினால் தெருவுக்கு வந்தவர்களும் இருக்கிறார்கள். தெருவில் நின்றவர்கள் நேரத்தைச் சரியாகக் கையாண்டு வாழ்வில் திருப்பு முனைகளூடாக நன்றாக வாழ்ந்தும் உள்ளனர்.

சில பேர் எனக்கு நேரமே சரியில்லை என்று சும்மா இருந்து கொண்டு நேரத்தைக் கடத்திக் கொண்டிருக்கின்றனர். ஆத்தர் பாரட் என்பவர் மனிதர்கள் எதையெல்லாம் எப்படி எல்லாம் வீணடிக்கிறார் கள் என்று ஒருகணக்கெடுப்புச்செய்தார். இறுதியாக மிஞ்சிப்போகும் சவர்க்காரத் துண்டை வீசுவது தான் மனித இயல்பு. இதை ஒரு புதிய சவர்க்காரம் நனைந்த பின்பு அதில் அழுத்தி விட்டால் அந்த தேய்ந்த சவர்க்காரத்துண்டானது பாவனைக்கு உட்படுவதைக் காணமுடிகின்றதல்லவா? இப்படியாக அலங்காரப் பொருள்கள், உணவு, மனித ஆற்றல் இவற்றை எல்லாம் வீணடித்துக் கொண்டு இருப்பதாகக் கண்டுள்ளார். இதன் உச்சக் கட்டமாக பாரட் சொல்லும் உண்மை எங்களை அதிர்ச்சியில் ஆழ்த்துகிறது. 24 மணிநேரத்தில் 60 வீத நேரத்தை (கிட்டத்தட்ட14 மணிநேரம்) வீணடிக்கிறோம் எனக்குறிப்பிட்டுள்ளார்.

விரயம் செய்யும் ஏனையவற்றை திரும்பப் பெற்று விடலாம். ஆனால் நேரத்தை இழந்தால், அந்த அற்புத மான நேரத்தை மீளப் பெற்றுக் கொள்வது என்பது முயற்கொம்பாகும். போன காலங்கள் போய் விடட்டும். இனி புது மனிதர்களாக உணர்வு பூர்வமாகச் சிந்தித்து நேரத்தை ஆட்சி செய்ய முன்வருவோம். எங்கள் முன்னாலே எதிர்காலம் என்ற வடிவத்தில் வரப் போகின்ற 24 மணி நேரங்களைத் திட்டமிட்டுப் பயனுள்ள வழிகளில் சரிவரப் பயன்படுத்துவோம். இருக்கின்ற நேரத்தைச் சரிவரப்பயன்படுத்தினால் இந்தப் பூவுலகில் இருந்து பெற்றுக்கொள்ள நிறையவே உள்ளன. அன்புள்ளங்களும், நட்பு உள்ளங்களும், குடும்ப உறவுகளும், வாழ்க்கைத் தேவைக்கு ஏற்ப வளமான செல்வங்களும் எங்களைச் சுற்றி நிறையவே இருக்கையில் இவற்றைப் பெற்று சந்தோசமாகத் திருப்தியாக புகழுடன் வாழநேரம் இல்லை என்றுசொல்லாது சகல தேவைக்கும் 24 மணித்தியாலங்களையும் சரியாகப் பயன்படுத்தி வாழப் பழகுவோமாக. இதை விட்டுத் தூங்கிக் கொண்டும், வீணே அரட்டையில் ஈடுபட் டும்நேரத்தைச் செலவுசெய்துகொண்டு இருப்பதைக் கை விட்டு விடுவோம். முயற்சி திருவினையாக்கும்

மாதுரி தனபாலசிங்கம்

# பள்ளி நினைவுகள்

தோழமையில் தொலைந்து போன நாட்களை மீண்டும் மீட்கின்றேன், எஞ்சுவது நினைவுகள் மட்டுமே. ஆடம்பரமற்ற கட்டிடங்கள், அன்பான அதிபர், ஆசிரியர்கள், விளையாட சிறு மைதானம், நிழல் தர ஆங்காங்கே மரங்கள், என மகிழ்ச்சியான ஒரு சூழல் தான் என் பள்ளி. தம் வாழ்க்கையை எமக்காய் அர்ப்பணித்த ஆசிரியர்கள். காலை முதல் மாலை வரை விரல்களில் படிந்த வெள்ளைக் கறையுடன், ஒவ்வொரு நாளும் எமக்காய் உழைத்த ஆசிரியர்கள் தெய்வங்களே. அன்று கண்டித்த ஆசிரியர்களை பிடிக்காமல் போனது. இன்று அவர்களை நினைக்கையில் விழியோரம் கண்ணீர்துளிகள். பணம் கொடுத்தாலும் பெற முடியாதது பள்ளிக்கால நண்பர்கள். நாம் மறந்தாலும் நாம் போட்ட சண்டைகளின் நினைவுகள் அடிக்கடி ஞாபகப்படுத்தும் அவர்களை. நண்பர்களுடன் அரட்டை அடித்து, வீதியை முழுவதுமாய் ஆட்சி செய்து போடும் சைக்கிள் பயணம், மழை காலங்களில் வெள்ளத்தில் மிதக்க விடும் காகிதக் கப்பல்கள், மாற்று வழி இருந்தும் வெள்ளத்தில் கால் நனைத்து மறுநாள் பள்ளிக்கு செருப்பு அணிந்து செல்வது என எத்தனை சொல்ல முடியாத அனுபவங்களை தந்தது பள்ளி.

மீண்டும் ஒரு தடவை பள்ளி வாழ்க்கையை அனுபவித்திட துடிக்குது மனசு. ஆனாலும் காலம் மார்தட்டி கூறுகின்றது வயததனை பள்ளியில் நிற்கும் ஒவ்வொரு மரம் நம்முடைய பல கதைகளை சுமந்து நிற்கின்றது. மழை காலம் ஆரம்பித்த உடனே நண்பர்களுடன் கிட்டிப்புல் விளையாடுவதும் கண்ணில் அடிபட்டு விடும் என அதை கண்டித்த ஆசிரியர்கள் வில்லனாய் தெரிந்ததும், விளையாட கொண்டுசென்ற மாபிள்களை பறித்து கிணற்றில் போட்ட பிறிபெக்ற்ஸ் (Prefects) அண்ணாமாரும், பள்ளி முடியும் மட்டும் அவர்களை மனதில் திட்டித் தீர்த்ததும், கிளித்தட்டு விளையாடி ஆண் நண்பர்களுடன் ஏற்பட்ட வாக்குவாதங்களை இன்றும் நினைக்கையில் மனதில் ஏதோ ஒரு சலனம்.

அழுகை, சிரிப்பு, ஏமாற்றம், அடிபிடி சண்டை, முதற் காதல், முதல்பிரிவு என அத்தனை அனுபவ பாடமும் தந்த ஒரே இடம் பள்ளி தான். என் போன்ற பலரை இன்று தலை நிமிர வைத்ததும் பள்ளி தான். அன்று அனுபவித்த தருணங்கள் இன்று நினைவுகளை மனதில் இறக்கும் போதும் இதயக்கூட்டில் சுமந்து செல்வேன் பள்ளி நினைவுகளை.

சே.கௌசிகன்

# தூய தமிழன் என்றும் துவண்டு போவதில்லை

அண்ட சராசரத்தை ஆளும் ஆண்டவனே!
அகிலத்தில் வாழ் அறிஞர்களே!
அகராதியில் கூட இல்லை
அச்சம் என்ற வார்த்தை தமிழனுக்கு

தாய்த்திரு நாட்டிலே தாய்மொழி பேச
தடை விதித்தாலும் என்றும்
தமிழன் துவண்டு போவதில்லை
ஆண்டாண்டு கண்ட பேராட்டத்தில்
அழிந்து போன சமூகம்
பார்வையற்று கிடந்தாலும்
என்றும் தமிழன் துவண்டு போவதில்லை

கண்களில் நீர்வழிய
காணாத உறவுகளைத் தேடி
கால்நடையாய் நடந்தாலும்
என்றும் தமிழன் துவண்டு போவதில்லை

சிறு வயதில் வாழ்ந்த நாட்கள்
சின்னச் சின்ன கனவுகள்
சீறியெழுந்த போரினால் சீரழிந்தாலும்
வீரத் தமிழன் துவண்டு போவதில்லை

போரின் கோரப்பிடியில்
சிறகற்ற பறவைகளாய் சிக்கினோம்
சிதைந்தாலும் சீரழிந்தாலும்
மார்பு தட்டிச் சொல்லும்
மானமுள்ள தமிழன் நாம்
மதிப்பையும் வெல்லும் - ஈழத்தமிழன்
என்றும் துவண்டு போவதில்லை

வினாவான வாழ்விற்கு
விடைதேடி அலைகிறோம்
விடை இல்லை என்றாலும் வீரியமான
மானத் தமிழன் துவண்டு போவதில்லை



க.கஜீபன்

# இசைக்கலை

கவினக்கலைகளுள் “இசைக்கலை” ஓரறிவு உயிர் முமுதல் ஆறறிவு உயிர்கள் வரை அனைத்தையும் தன் வயப்படுத்தும் ஆற்றல் பெற்று விளங்குகின்றது. இசை என்ற சொல்லுக்கு “இசைய வைப்பது” என்பது பொருள். மனிதனையும் மற்றைய உயிரினங்களையும் ஏன் இறைவனையுமே இசைய வைக்கின்ற, இணையச் செய்கின்ற ஓர் அரும் சாதனம் இசை. இசையின்மை என்பது கட்டுப்பாடில்லாத இனிமையைத் தராத ஒலியை இரைச்சல் என்கின்றோம்.

இசைகேட்டு மயங்காத உயிரினம் இல்லை என்பதை மகுடியின் இசையில் மயங்கும் பாம்பு முதற்கொண்டு இசைகேட்டு வளரும் தாவரங்கள் வரையிலான செயல்கண்டு உணரலாம். இன்பத்திலும் துன்பத்திலும் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றல் இசைக்குண்டு. மேலும் துன்பத்திற்கு ஆறுதல் அளிக்கும் நன் மருந்தாக இசை பயன்பட்டு வருவதும் கருத்தக்கது. இனிமையான ஒலிகளின் செயற்கையினால் பெறப்படுவது இசையாகும். இது அனைத்து உயிர்களின் உள்ளத்தை உருக்கும் தன்மை வாய்ந்தது. இனிமை மிக்கது, எழில் வாய்ந்தது. இசை மக்களுக்கு மகிழ்ச்சியூட்டும் தன்மையும், எழுச்சியூட்டும் வண்மையும் அமைப்பெற்றதாய் இருக்கின்றது. மனிதன் நாடு, மொழி, இனம், பண்பாடு ஆகிய நிலைகளில் வேறுபட்டிருப்பினும் அவனை உள்ளம் சார்ந்த ஒருமை நிலைக்கு கொணரும் ஆற்றல் பிற கவின்கலைகளிலும் பார்க்க இசைக்கலைக்கே உரியது என்பது கருத்தில் கொள்ளத்தக்கது.

இறைவன் இசைவடிவமாய் இருக்கிறார் என்பது முதுமொழி ஆகும். “எழிசையாய் இசைப்பயனாய்” என்று சுந்தரமூர்த்தி நாயனார் பாடியுள்ளார். அப்பர் பெருமான் “ஓசையொலியெலாம் ஆனாய் நீயே” என்று இறைவனை எண்ணி உள்ளம் உருகுகின்றார். திருஞானசம்மந்தர் இறைவனைப் “பண்ணமர் வீணை யினான்” என்று வர்ணிக்கின்றார். திரைப்பட பாட்டிலும் “சங்கரா நாதசீரரா” என்று நாம் கேட்டு வருகிறோம். இசையின் ஒலிக்கோர்வையே இறைவனின் எழிலுருவமாக உள்ளது. மேலும் நுண்ணறிவு இல்லாதவரும், கற்றாரும், கல்லாதாரும், செவ்வந்தரும், ஏழையும், பறவைகள், மிருகங்கள், மனிதர்கள், தெய்வங்கள் வரை உள்ள எல்லா உயிர்களையும் ஈர்க்கக் கூடியதுமான இசைக்கலையே இவற்றுள் தலைசிறந்த கலை யாக உள்ளது. எனவே மனநிறைவை அளிக்கக்கூடியதும், நோயைத் தீர்க்கக் கூடியதும், சகல ஜீவராசி களை யும் மெய்மறக்கச் செய்வதுமான இசைக்கலையை ஒரு “தெய்வீகக் கலை” என்று நாம் போற்றுகின்றோம்.

ஒலியின் பல்வேறு ஏற்ற இறக்கக் கூறுகளை இனிமையாக இணைத்து மனவப்புடைய அதனை இசைத்துக் காட்டுவதில் இசைக்கலை பிறக்கின்றது. சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பண்டைத் தமிழர் இசைக்கும் உரிய இடத்தினை அளித்துப் போற்றியது வரையிலான செயல்களை முச்சக்கர நூல்களின் வாயிலாக உணராம். பண்டைய மக்களின் வாழ்வு இசையில் தொடங்கி இசையோடு முடிதலைக் குழந்தையின் தாலாட்டு தொடங்கி முதியோரின் இறப்பு ஒப்பாரியில் முடிவது கொண்டு அறிய முடிகிறது.

பல்வேறு துன்பங்களையும் மறந்து ஒன்றித்துப்போகும் தன்மை கொண்டது. இசை என்று கூறினால் மிகையாகாது. அரவணைக்கும் தன்மை கொண்டமையாற் தான் தாய்க்கு ஒப்பாகக் கருதப்படுகிறது. வாழ்க்கைக்கு மிகவும் இன்றிமையாதவையாகிய சமய அனுட்டானங்களில் இசைக்கு ஒதுக்கப்பட்ட இடம் தெய்வீகத்திற்கு ஒப்பானது. “சமயாசயம் வேளாவேளை” எனக் கிரிகைகளோடு இணைந்து இசைக்கப்பட்டது. இசைக்குரிய மகத்துவமாகும். இதனையே;

“காலையொடு துந்துபிகள் சங்கு குழல்
யாழ் முழவு கா மருவு நீர்

மாலை வழிபாடு செய்து மாதவர் க
ளேந்தி மகழ் மாகறலுளான்
தோலையுடைய பேணியதன் மேலோர் சுடர்
நாகசையா அழகிதாப்
பாலையென நிறுபுனை வாழையை
யேத்தி வினை பறையுமுடனே"

எனும் பாடலடிகள் பூஜைவேலைகளையும், இசைக்கருவிகளையும் சமய வழிபாடுகளோடு இணைத்துக் கூறப்படுள்ளமையை காணலாம். ஒவ்வோர் இன மக்களும் தமது மொழி, இனம், பண்பாடு என்பதற்கமைய இசைக்கலையை வகுத்துள்ளார்கள். அவை பாரம்பரிய இசை (clasical) எனவும், மெல்லிசை (light Music) எனவும், நாட்டார் இசையும் (Flik Musick) ஆகும். இவற்றிலே நாடோடி பாடலிசை எனவும் ஓர் பிரிவு வழக்கிலுள்ளதை அறியலாம்.

அது மட்டுமன்றி இசையின் பயனினை நோக்கும் போது எளிய நிலையில் உயிர்களைத் தன்பால் இசைவிப்பதுப் உயர்ந்த நிலையில் இறைவனைத் தன்பால் இசைவிப்பதும் இசையின் ஆற்றலாகும். என்று இசையின் பயனை இறைவனுடன் மனிதமனம் ஒன்றுவதற்குரிய உயர்நிலைக்கு உயர்திகாட்ட செ.வைத்தியலிங்கம் முற்படுகிறார். இசையே பெரும்பாலும் சமயங்களை வளர்த்து வந்துள்ளன. இசையாற்றவாய் மனித மனத்தை எளிய வயப்படுத்தி இசையுணர்வுக்கு வழி செலுத்த முடியும். என்பதைச் சமயங்கள் உறுதியாக நம்பதியுள்ளன.

மேலும் இசையென்பது கடவுளின் திருமுன்னர் மக்களை இருட்டுச்சென்று ஒன்றவைக்கும் அருங்கலையாகும் என்று கூறுகின்றார். கவின்கலைகளுள் மிகநுட்பமான இசைக்கலையினை நாதயோகம் என்றே சொல்வர். விண்ணையும் மண்ணையும் இணைக்கும் இனியபாவம் என்று கூறுவர். இறையுணர்வை இசை ஊட்டவல்லது என்பதைப் பலரும் ஒப்புக் கொண்டே கருத்துத் தெரிவிக்கின்றனர். ஆலயங்களில் இசைக்கலை நிகழ்ச்சிகள் ஒரு புனித கடமையாக நடைபெறுகின்ற காரணத்தை இதைக் கொண்டு சிந்தித்து உணராலாம்.

இன்பதத்திலும் துன்பத்திலும் உள்ளத்து உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் ஆற்றல் இசைக்கண்டு என்றும் துன்பத்திற்கு ஆதரவளிக்த் நன்மருந்தாக இசை பயன்பட்டு வருகின்றது. என்றும் சு.வே சுப்பிரமணியன் கூறும் கருத்து சிந்திப்பதற்குரியது. இன்பமுறும் போதும் துன்பமுறும் போதும் மனிதன் இயற்கையாகப் பாட முயல்வதையோ பாடிக் கேட்க விரும்புவதையோ காணலாம். பாடலுக்கு இன்பம் கொடுக்கும் ஆற்றலுடன் துன்பம் துடைக்கும் ஆற்றலுமுண்டு.

பண்பட்ட எல்லா இனங்களும் தத்தக்குரிய இசை மரபுகளைக் கொண்டுள்ளன. காடுவாழ் மாந்தரும், நாடோடி இனங்களும் கூட தமக்கு உரிய இசைமரபுகளைக் கொண்டுள்ளனர். பழமைச் சிறப்புமிக்க தமிழினத்தின் இசைமரபும் கூடப் பழமையுடையதாகும். அனைத்து உயிர்களையும் வயப்படுத்துவது எனும் பொருளில் இசை என்று பெயரிட்ட தமிழின் நுண்ணறிவை பாராட்ட வேண்டு என்று அ.தட்சிணாமூர்த்தி கருத்து தெரிவிக்கிறார். இக் கருத்தைத் தெரிவித்து இசைக்கலையின் பிணி தீர்க்கும் ஆற்றலைப்பற்றியும் குறிப்பு தருகின்றார். பண்டைக் காலத்தில் பண்பட்ட வீரர்களைப் பேய்களிடமிருந்து காஞ்சிப் பண்ணையும் பாடினர் என்பதும் புறநானூற்றில் விளக்கப்படுகின்றது.

தீஞ்கவி யிரவமொடு வேம்பு மனைச் செரீஇ
வரங்குமருப் பியாமொடு பலலியங் கறக்க
கைபயப் பெயர்ந்து யைிழ திழகி
ஐயவி சிதறி ஆம்பல் ஊதி
இசைமணி யெறிந்து காஞ்சி பாடி
நெடுநகர் வரைபிற் கடி நறை புகை இக்
காக்கும் வம்போன காதவர் தோழி
வேந்துறு விழுமம் தாங்கிய
பூம்பொறிக் கழற்காய் நெடுந்தகைப் புண்ணே; (புறநானூறு 281)

என்ற பாடலடி காஞ்சி பாடி விழுப்புண்ணாற்ற முற்படல் குறிப்பிடப்பட்டுள்ளது.

“விளரிக் கெட்டபின் வெண்ணரி கடிகுவன்” (புறநானூறு 291.4)

என்ற பாடலடி விளரிப்பாடினால் நரி மருளும் என்ற குறிப்பைத் தருகின்றது.

இசைகேட்டு பிணியகல்ராகப் பல நிகழ்ச்சிகளில் பேசப்படுகின்றன. மகுடியில் பாம்பு மயங்கி ஆடுவதாக இரை மறந்து நிற்பதாக உரைக்கப்படுகின்றது. நற்பலனை மிகுதியாகப் பயிர்கள் தர நல்லிசை கூட்ட வேண்டு என்று சொல்லப்படுகிறது. பிறந்த குழந்தை பாடல் கேட்டு இன்னிசை கேட்க விரும்புகின்றான். இறையுணர்வுப் பாடல்கள் அவன் மனதிற்கு இன்பத்தைக் கொடுத்து அவனுடைய உயிரை அமைதியுடன் அடங்கப் பண்ணுகிறது. இசையால் விழாக்கள் சிறக்குகின்றன. இன்பம் தருவதுடன் இசை வீரவேகத்தையும் தருகின்றது. வீர உணர்வுப் பாடல்கள் போராட்ட வீரர்களின் வீர உணர்வைத் தட்டி எழுப்புகின்றன. விளையாட்டு வீரர்களும் இசையை விரும்புகின்றனர். இசை பல்வகையாக, எழுத்து பல்வகை வினைப்பயன்களுக்கு ஊக்க உந்தாற்றலாக விளங்கிற்று.

இசைக்கலை எப்போது தோன்றிற்று என அறுதியிட்டுக் கூற முடியாது. பழமை வாய்ந்தது எனினும் எமக்கு கிடைக்கின்ற சங்க நூல்களின் வாயிலாக இசையின் சிறப்பியல்புகளை நோக்கும் போது முச்சங்கங்களில் இடைச்சங்க கால இயற்றமிழ் இலக்கண நூலாகிய தொல்காப்பிய நூலில் இசையைப் பற்றிய குறிப்புகளைக் காணும் போது இந்நில உலகத்தை காடு, நாடு, கடல், மலை என நான்கு கூறுகளாக வகுக்கப்பட்டுள்ளது காணலாம். ஆடலும் இயற்கை காட்சியுடன் இணைந்த இயல்தலங்களும் காதல், வீரம், அன்பு, பண்பு இன்னோரன்னவற்றுடன் இதயத்தை தொடும் நீர்மையுடன் நம் பண்டைய புலவர் பெருமக்கள் இசையை வளர்த்துள்ளார்கள். இசை முறையினை நுகர்வதும் அறிவதும் இன மத மொழி, பண்பாடு சார்ந்த வளர்ச்சியாகும். உலகில் பல நாடுகளும் மொழிகளும் தங்களுக்கென்று ஓர் இசையை இசைமரபுக்கமைய வகுத்துள்ளார்கள். அது மட்டுல்லாது அரசியல் சூழ்நிலைகளாலும் இசையானது கர்நாடக இசை, ஹிந்துஸ்தானி இசை, மேலைத்தேய இசை என பிளவுபட்டு இன்று தனித்தனியாக வளர்ந்து சிறப்பு பெற்றுள்ளது.

## புத்தகப் பண்பாட்டு விழா

தேசிய கலை இலக்கியப் பேரவை கைதடி கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்துடன் இணைந்து புத்தகப் பண்பாட்டு விழா ஒன்றனை ஒக்டோபர் மாதம் 28, 29, 30 ஆகிய மூன்று நாட்கள் கைதடி மூத்துக்குமாரசாமி மகா வித்தியாலயத்தில் நடத்தினர்.

தேசிய கலை இலக்கியப் பேரவையிலர் கிராமங்களை நோக்கி தங்களின் புத்தகப் பண்பாட்டு நிகழ்வை வியாபித்து வருகின்றனர். வாசிப்பு மீதான மறுமலர்ச்சியை உண்டாக்குதல் இதன் நோக்கமாகும்.

இன்று இளைய தலைமுறையினரிடையே வாசிப்பு பழக்கம் அருகி வருகின்றமை எல்லோருக்கும் தெரிந்த விடயம். அதனால் ஏற்பட்டுள்ள பண்பாட்டு மாற்றம் இன்று அனுபவித்து வருகிறோம். இவற்றுக்கு சிகிச்சையளிக்கு முகமாக இத்திட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர்.

நூறு மலர்கள் மலரட்டும் என்ற தொனிப் பொருளில் உள்ளூர் எழுத்தாளர்களின் புத்தகங்களை அறிமுகம் செய்து, புதிய விமர்சகர்களுக்கு களம் அமைத்துக் கொடுத்தமை இந்நிகழ்வின் முக்கிய அம்சமாகும்.

முதலாம் நாள் நினைவரங்கு பண்டிதர் சு.வேலுப்பிள்ளை அவர்களின் பெயர் கொண்டு நிகழ்வுகள் சிறப்பாக நடைபெற்ற நூல்கள் பற்றிய அறிமுக விமர்சன உரைகளும், சிறுவர்களுக்கான நாடக அரங்கு என்பன நடைபெற்றன. ஆர்வத்துடன் சிறுவர்கள் காண வந்தமை நிகழ்வுக்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி. இதே போல இரண்டா நாள் நினைவரங்கு கவிஞர் சி.முருகையனின் பெயரைத் தாங்கி இடம்பெற்றது. மூன்றாம் நாள் நினைவரங்கு அண்ணாறியார் சி.வேலன் நினைவரங்கிற்குரியது. இன்றைய இளைய தலைமுறையினர் போதைப்பாவனையால் சீரழிந்து போகின்ற இந்தக் காலச் சூழலில் இவ்வகையான பண்பாட்டு ரீதியான மாற்றத்தின் மூலம் திசை திருப்ப முடியும். இதற்கு அனைவரினதும் பங்களிப்பு அவசியம்.

**சி.நேருஜா**
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்
தரம் - 11

# போதை எனும் தீயபாதை

விழித்திடு மானிடா! உன்னை வீழ்த்திவிடும்
வீரமற்ற போதைப்பொருட்கள் முன்னே!
வீறுகொண்டு எழுந்திடு மனிதா!
வினைகளைக் கண்டு அஞ்சி விடாதே !

சீறிப் பாய்ந்து விடு மனிதா!
சீரழிக்கும் போதைப் பொருட்கள் முன்னே
போதை எனும் தீய பாதையை முடக்கி
மேதை எனும் நல்ல மனிதனை உருவாக்கு

வண்ண வண்ணமான வாழ்க்கை மாறிட
வண்ண மயில் அழகினை இழந்திட
வரம்புடன் வாழ்ந்தவனை எல்லை மீற வைக்கிறதே
வம்சம் இழந்து உன் உறவுகள் அழிகிறதே!

அஞ்சிவிடாதீர்கள் மனிதர்களே
அழிந்துவிடும் இந்த போதை
அகிலம் அதைக்காத்திட
அனலாய் எழுந்து வா அதன் முன்னே

தடங்கிக்கிடப்பதை முடக்கி
தரணியில் போதையைக்கட்டுப்படுத்தி
தலை நிமிர்ந்து வாழ்வதற்கு
போதை எனும் தீய பாதையை அழித்துவிடு

உயிர்கள் அழிந்தது போதும்
உன்னதமாய் வாழ வேண்டும்
வாரம் ஒருமுறை அருந்தினால் மருந்து
தினமும் அருந்தினால் மரணம் தான் விருந்து

கஞ்சா, கசிப்பு, மதுசாரம் போன்ற போதையை
அழித்துகம்பீரமாய் நீ வாழ்வதற்கு
காத்திடுவோம் எமது பூமியை ஒன்று சேர்ந்து
கடலலையாய்ப் பொங்கி வா!

பள்ளி சென்று படித்திட
பட்டம் பல பெற்றிட
பாரினிலே நீ உயர்ந்திட
போதை எனும் தீய பாதையை உடைத்து விடு!

குடியால் விடியாது உ ன் வாழ்வு - அதுவே
மதியால் நீ முயற்சித்தால் விடிந்துவிடும் உன் வாழ்வு
போதும் மனிதா நீ அழிந்தது
போதையற்ற சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்பு

சீற்றம் கொள் மனிதா உன்
சினம் தணியும் வரை
சிகரம் தொட்டு வாழ்ந்திட
சிறகடித்து ஓடி வா!

எத்தனை எத்தனை மனஅழுத்தங்கள், மாறுதல்கள்
எண்ணும் போது மனம் வலிக்கிறதே
ஏன் இந்த போதைப்பொருட்கள்
அழித்து விடு புதைத்து விடு மண்ணில்

அழித்திடுவோம் இந்த போதைப்பொருட்களை
காத்திடுவோம் எங்களது அகிலத்தை
காப்பாற்றுவோம் நம் மக்களை
ஒன்றாய் திகழ்வோம் போதையை எதிர்த்து

போதை எனும் தீய பாதையை அழித்து
புவனம் அதை காத்து
பாலர் எனும் எம்மை காப்பாற்றி
பறந்திட வைப்போம்

போதை போதை போதை
எங்கும் போதை
போதையை அழித்திடு
விழிப்புடன் செயற்படு

செல்வி சு.மகிழ்நிலா
யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலயம்
தரம் - 10

# சம காலத்தில் நூலகமும் வாசிப்பும்

தனி நபரை வளப்படுத்துவதற்காக தோன்றிய நிறுவனங்களே சமூக நிறுவனங்கள் எனப்படுகின்றன. தனிநபரை சமூகத்துடனும் சமூகத்தை தனிநபருடனும் இணைக்கும் பாலமாக இச்சமூக நிறுவனங்கள் செயலாற்றுகின்றன. அவற்றில் நூலகம் முக்கிய இடம் வகிக்கின்றது. நல்ல நூல்களை தன்வசம் வைத்திருக்கும் இந்நூலகமானது சமூகத்தில் பாரிய பங்களிப்பை வழங்குகின்றது. அந்த வகையில் தற்கால சமூகத்தில் நூலகம் ஆற்றும் சேவைகள் பற்றியும் வாசிப்பு பற்றியும் இக்கட்டுரையினூடாக உற்று நோக்குவோம்.

"வாசிப்பதனால் மனிதன் பூரணத்துவமடைகின்றான்" என்பது ஓர் ஆன்றோர் கூற்று. இக்கூற்று உண்மையானதே. வாசிப்பின் மூலம் தான் மனிதன் சொற்றிறன், கலைத்திறன், ஆக்கத்திறன் என்றவாறாக பற்பல திறன்களைப் பெற்றுக் கொள்கிறான். இத்தகைய வாசிப்பு பழக்கத்தை தூண்டுவதில் நூலகம் அளப் பரிய பணியை ஆற்றுகின்றது. மனிதன் எவ்வளவு சிறப்பாக வாழ வேண்டும் என எண்ணுகிறானோ? அந்தளவுக்கு அவன் நூல்களை கற்க வேண்டும். அவ்வளவு நூல்களைப் பெற வேண்டுமெனின் அவன் நூலகம் எனும் அறிவுக்கோயிலை அடைய வேண்டும். இவ்வாறு பல நூல்களைக் கற்று வாழ்வில் உயர்ந்தவர்கள் பலர் உள்ளனர். "ஒரு கோடி பணம் தந்தால் என்ன செய்வீர்கள்?" என்று கேட்டபோது ஒரு தனித்தீவில் ஒரு நூலகம் கட்டுவேன்" என்றாராம் மகாத்மா காந்தி. ஒரு தனித்தீவில் தள்ளப்பட்டால் எப்படி வாழ்வீர்கள் என்று வினாவிய போது புத்தகங்களுடன் சந்தோசமாக வாழ்ந்து விட்டு வருவேன்" என்றாராம் ஜவகர்லால் நேரு. "புரட்சிப் போராட்டத்தில் சிறந்த ஆயதங்கள் புத்தகங்களே என்றாராம்" இன்னொரு அறிஞர்.

இவ்வாறு பற்பல வாசிப்பின் வித்தைகளை வழங்கும் நூலகத்தை தற்கால சமூகத்தினர் பயன்படுத்துகிறார்களா? என்ற கேள்வி எழுந்தால் பெரும்பாலானவர்கள் கூறும் பதில் "இல்லை" என்பதே. இதுவே உண்மை. விஞ்ஞான உலகில் ஓடிக் கொண்டிருக்கும் இன்றைய மனித சமூகம் தொடர்பாடல் சாதனங்களில் மூழ்கிப் போயுள்ளது. சமூக வலைத்தளங்கள் எனும் பெயரில் தேவையற்ற விடயங்களை பகிர்ந்து இறைவன் தந்த கொடையான பார்வைத் திறனை அழிக்கின்றனர். அதுமட்டுல்லாது சமூக விரோத செயல்களிலும் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கெல்லாம் முக்கிய காரணம் நூலக பாவனையும் வாசிப்புப் பழக்கமு குறைவடைந்து செல்வதனாகும். நூலகம் தன்னகத்தே பல அறிவுக் கோயில்களை எழுப்ப வைத்திருந்தாலும் அதனை தரிசிக்க தயராக இருப்பவர்கள் ஒரு சிலரே. இன்று நூலகமானது பல்வேறு வடிவங்களில் விரிவடைந்து காணப்படுகின்றது. பிரதேசத்தில் பொது நூலகம், பாடசாலைகளில் கற்றல் வள நிலையம், நடமாடும் நூலகம் என பலவாறு தன் சேவைகளை ஆற்றி வருகிறது. ஆனால் இதனைப் பயன்படுத்துவதற்கான ஆர்வம் எல்லோரிடத்திலும் இல்லை. E-Learning, DB education என பல இணைய வழித்தேடல்கள் உருவாகியிருப்பது நன்மையே. ஆயினும் மாணவர்கள் நேரில் நூலகம் சென்று அங்கே புத்தகங்களை தேடி தகவல்களை பெறுவதே சிறந்த ஆரோக்கியத்தையும் அறிவையும் கொடுக்கும்.

உடலுக்கு உடற்பயிற்சி தேவையென்பதைப் போன்றே மனத்துக்கு வாசிப்பு அவசியமானது. இதனை மாணவர்களாகிய நாம் புரிந்து கொள்ள வேண்டும். "கண்டது கற்கப் பண்டிதனாவான்" என்ற கூற்றுக்கிணங்க நாம் பல நூல்களைத் தேடி எம் அறிவை விருத்தி செய்ய வேண்டும், கற்றது கைமண்ணளவு; கல்லாதது உலகளவு என்ற பொன்மொழியை நம் மனதில் நிலைநாட்டி எம் உயிர் உடலை விட்டுப் பிரியும் வரை புத்தகங்களுடனும் வாசிப்புடனும் எம் பொழுதைக் கழிப்போமாக.

"நல்ல நண்பன் நல்ல புத்தகம்"

# என்னுடன் புத்தகம் இருந்தால்

செல்வன் த.சண்முகேஷ்
யா/கைதடி விக்கேஸ்வரா வித்தியாலயம்
தரம் - 07

என்னுடன் புத்தகம் இருந்தால்
என்னுடல் புத்தகமாய் மிளிர்ந்திடும்
இருந்த இடத்தில் இருந்தவாறே
இந்த உலகத்தினை அறிந்திடுவேன்

சில புத்தகங்களை சுவைத்தேன்
சிலவற்றை விழுங்கினேன்
சிலவற்றை மென்று ஜீரணித்தேன்.

என்னுடன் புத்தகம் இருந்தால்
இந்திரியங்களும் இயற்கையும் என்
இதயத்தோடு இரகசியமாய் உறவாடும்
உடலும் உளமும் ஒருமைப்படும்
ஊக்கமும் ஆக்கமும் கைகூடு

என்னுடன் புத்தகம் இருந்தால்
அறிவார்ந்த சிந்தனைகள் அகத்தினில்
அனுதினமும் சுடர்விட்டு பிரகாசிக்கும்
பூத உடல் பொலிவுற்ற
புகழ் உடல் பூணுவேன்.

மகத்தான புத்தகங்களை மனதின்
பயிற்சிகளால் பயில்கின்றேன்- என்
பிறந்தநாள் விழாவினது பரிசாக
வேண்டுவது புத்தகங்களே ஆகும்

என்னுடன் புத்தகமும் இருந்தால்
அன்பும் அறிவும் வளரும்
ஆக்கமும் நோக்கமும் கைகூடும்
இன்பமும் இனிமையும் நிலைக்கும்
ஈகையும் கீர்த்தியும் உயரும்
உண்மையும் நன்மையும நிலைக்கும்
ஊக்கமும் ஆக்கமும் கைகூடும்
எளிமையும் செழிமையும் கிடைக்கும்
ஏற்றமும் தேற்றமும் எனதாகும்
ஐயம் திரிபிலா வாழ்வாகும்
ஒற்றுமை நிறைந்த வாழ்வாகும்



ஓங்கும் புகழ் கைகூடும்
ஔவை பொன்மொழி அகமாகும்

என்னுடன் புத்தகம் இருந்தால்
பெற்றோரும் உற்றாரும் பெருமை கொள்வர்
கற்றோரும் மற்றோரும் காமுறுவர்
நண்பர்கள், அன்பர்கள், அகிலத்தவர்களுக்கும்
அகம் மகிழ்ந்து போதிப்பேன்

என்னுடன் புத்தகம் இருந்தால்
பொன்னுடல் பொலிந்து
பொன்னுலக வாழ்வு கிடைக்கும்.

செல்வி வ.தனிஷா
தரம் - 09
யா/கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்

# அறிவார்ந்த சமூகத்திற்காக வாசிப்பு

மட்டக்களப்பின் மத்தியில் ஓர் அழகிய கிராமம் உண்டு. அக்கிராமத்தில் விவசாயத்தை அடிப்படை யாகக் கொண்ட ஏழை மக்கள் வசித்து வந்தனர். அங்கே ம/உழவனூர் விக்னேஸ்வர வித்தியாலயம் என்ற பாடசாலை ஒன்று உள்ளது. அப்பாடசாலை அவ்வூருக்கே சூரிய வெளிச்சம் கொடுப்பது போல் அமைந்திருந்தது. பெரும்பாலான மாணவர்கள் தமது கஷ்டத்தை போக்கவும் தமது கனவை நனவாக்கவும் தாம் சூழலில் நல்ல அங்கீகாரம் பெறுவதற்காகவும் மிக ஆர்வத்தோடு கற்றனர். ம/உழ.வி.வி. பாடசாலையில் தரம் 9 இல் இராமன் என்ற ஒரு மாணவன் இருந்தான். அவன் கல்வியில் ஈடுபாடு இன்றி இருந்தான். அவனோடு இருந்த மீதி நால்வரும் இவ்வாறே படிப்பில் ஆர்வம் இன்றி இருந்தனர்.

ஒரு நாள் தமிழ்ப் பாட ஆசிரியர் கல்வி கற்பித்துக் கொண்டிருந்த போது இராமன் குழப்படி செய்து கொண்டிருந்ததை பார்த்துவிட்டு தனியாக அழைத்து பேசினார். அப்பொழுது தான் ஆசிரியருக்கு “இராமனால் படிக்க முடியும் ஆனால் அவன் படிப்பில் ஈடுபாடு இன்றி இருக்கின்றான்” என்று தெரிய வந்தது. மறுநாள் ஆசிரியர் இராமனை அழைத்து “நீ ஒரு நூலை வாசித்து அதில் உள்ளவற்றை கூறினால் நான் உனக்கு ஒரு பரிசு தருவேன்” என்று கூறியதோடு நீ எத்தனை நூல்கள் வாசிக்கின்றாயோ அத்தனை பரிசுகள் தருவேன் என்றார். அவன் பரிசு வாங்கும் ஆர்வத்தில் நிறைய நூல்களை வாசித்து அதில் உள்ளவற்றை கூறி பல பரிசில்கள் பெற்றான். அவன் சில வாரங்களாக ஆசிரியரிடம் கதை கூற செல்லவில்லை. அதனால் ஆசிரியர் இராமனிடம் சென்று விசாரித்த போது அவன் “இவ்வளவு நாட்களும் நான் பரிசுகள் வாங்கு வதற்காகவே நூல்களை வாசித்து அதில் உள்ளவற்றை கூறினேன். இப்பொழுது நான் எனக்காக வாசிக்கின்றேன்” என்று சிரித்தபடி கூறினான். இராமன் “வாசிப்பதால் மனிதன் பூரணமடைகின்றான்” என்பது உண்மை தான் என்று உணர்ந்தான். தரம் 9 இறுதி பரீட்சையில் இராமன் அதிக புள்ளிகளை பெற்றதோடு அவனுடன் இருந்த நால்வருக்கும் அறிவுரை, புத்திமதி கூறி அவர்களையும் அதிக புள்ளி பெற வைத்தான். பின்னர் போட்டிகளில் பங்குபற்றி வலயமட்ட, மாகாண மட்டங்களில் முதலாம்/ இரண்டாம்/ மூன்றாம் இடத்தைப் பெற்றான். வாசிப்புப் போட்டியில் தேசிய மட்டத்தில் தங்கப் பதக்கத்தை வென்றான். அப்பொழுது அவன் பேட்டியின் போது “எனது இந்நிலைக்கு எனது தமிழ்ப் பாட ஆசிரியர் திருமதி ரோஜா அவர்களே காரணம் இதனை நான் அவருக்கு சமர்ப்பிக்கின்றேன்” என்று கூறினான்.

உயர்தரப் பரீட்சையில் இராமன் தேசிய ரீதியில் 1 ஆம் இடத்தைப் பெற்று பல விருதுகளை பெற்றான். அவன் எங்கு கேட்டாலும், “எனது இந்நிலைக்கு வாசிப்பே காரணம்” என்று கூறுவான். பின்னர் அவன் ஓர் ஆசிரியர் ஆனான். இப்பொழுது அவனது நண்பர்கள் “உனக்கு வைத்தியர் ஆகக்கூடிய திறன் இருந்தும் நீ ஏன் ஆசிரியர் ஆனாய்” என்று கேட்டபோது, இராமன் “என்னை உருவாக்கியது ஓர் ஆசிரியர் நானும் அதேபோல் பல மாணவர்களை உருவாக்க வேண்டும்” என்றான்.

அவன் அவனது ஆசிரியத் தொழிலை மிகச் சிறப்பாக செய்தான். அத்துடன் அவன் எந்நிகழ்ச்சிக்கு சென்றாலும் வாசிப்பை வலியுறுத்தியே பேசுவான். அவ்வூரில் யாராவது படிக்காது இருந்தால் மாணவர்களை அழைத்து நல்ல அறிவுரைகளை கூறி அவர்களை படிக்க செய்வதற்கு நூல்களை அன்பளிப்பாக வழங்குவான். இராமன் அரசாங்கத்துடன் இணைந்து உழவனூரில் 4 நூல் நிலையங்களை அமைத்தான். அதனால் அவ்வூரிலே உள்ள மக்கள் நூல்நிலையத்துக்கு சென்று நூல்களை தினமும் வாசிப்பார்கள். அங்குள்ள மாணவர்களும் நல்ல துறைகளில் இணைந்து தமது ஊரில் வாசிப்பை மேம்படுத்துவதற்கு பாடுபட்டனர். வாசிப்பு மாதத்தை ஒட்டி பங்கு பற்றிய மட்டக்களப்பு உழவனூர் கிராமத்துக்கு அறிவார்ந்த சமூகத்திற்கான வாசிப்பு என்ற பட்டம் தேசிய நூல்நிலைய ஆவணமாக்கல் நிலையத்தால் வழங்கப்பட்டது.

“அறிவே தெய்வம்”, “வாசிப்போம் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம்”

செல்வி செ.பிரியதர்சினி
தரம் - 13
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகா வித்தியாலயம்

# இன்றைய பொருளாதாரத்திற்கு இளைஞர்களின் பங்கு

மின்னியல் யுகமாக காணப்படுகின்றது இவ் உலகம். இவ் மின்னியல் யுகமான உலகில் பல்வேறுபட்ட பிரச்சினைகள் எதிர் கொள்ளப்படுகின்றன. இதற்கு இளைஞர்களின் பங்கு அவசியம் ஆகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் கால்பதித்த இலங்கையானது பல்வேறுபட்ட பிரச்சினையை எதிர் நோக்கிய இருப்பதை நம்மால் அறியக் கூடியதாக இருக்கிறது. இவ் நூற்றாண்டில் இலங்கை கொரோனா வைரஸ்சால் முற்றும் பாதிப்படைந்து காணப்பட்டது. இக்கொரோன நோய் முதல் முதலில் சீனாவில் வூகான் என்னும் ஆய்வு கூடத்தில் ஏற்பட்டது. இவ்நோய் ஒரு தொற்று நோய் காரணியாக அமைந்துள்ளது.

இவ் கொரோனா நோயால் உலகம் முழுவதும் முடங்கி காணப்படும் நிலை காணப்பட்டது. இதனால் அரச, சமூக, பொருளாதார, சமய நிறுவனங்கள் முற்று முழுவதும் முடக்கப்பட்டு இருந்தன. ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு செல்லும் போக்குவரத்து தடைப்பட்டது. ஒருவருக்கு ஒருவர் நிகழும் தொடர் பாடல் பாதிப்படைந்தது. அத்தியாவசியமான சேவைகள் முடக்கப்பட்டன. இவ் கொரோன நோயால் மக்கள் முடங்கி இருந்தமையால் அரசியலில் பல்வேறு தாக்கத்தை ஏற்படுத்தியது. ஒரு நாட்டினை கொண்டு நடாத்து வதற்கு அரசியல் ஒரு முக்கிய காரணியாக அமைகின்றது. அரசியல் கட்சிகள், அரசியல் வாதிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் தமது சேவைகளை செய்து கொள்ள முடியாத நிலை ஏற்பட்டது. இது போன்ற செயற் பட்டால் அரசியல் முற்றும் முழுவதுமாக பாதிப்படைந்தது. மேலும் சமூகத்தின் பலவகையான மாற்றத்திற்கும் இவ் கொரோன நோய் காரணமாக அமைந்தது. அதாவது நாடு முடக்கப்பட்டமையினால் ஓர் இடத்தில் இருந்து இன்னொரு இடத்திற்கு மேற்கொள்ளும் வர்த்தக செயற்பாடு செயல் இழந்து போனது. ஒரு நாட்டின் பொருளா தார வளர்ச்சியில் ஏற்றுமதி, இறக்குமதி முக்கியமானதாகும். இவ் கொரோன நோயால் ஏற்றமதி இறக்குமதி முற்றும் செயலிழந்து போனது. இதனால் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு இளைஞர்கள் முகம் கொடுக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. உள்நாட்டு உற்பத்தி வெளிநாட்டு உற்பத்தி முற்றும் முழுவதும் சிதைவடைந்தது.

தற்போதைய காலத்தில் நாம் எதிர் நோக்கிய பிரச்சினையாக பொருளாதார நெருக்கடியைக் கூறலாம். அதாவது டீசல், பெற்றோல் என்பவற்றிக்கு அதிக தட்டுப்பாடு காணப்படுகிறது. இவ் மின்னியல் யுகமாக காணப்படும் உலகில் போக்குவரத்துக்கு தேவையான எரிபொருள் தட்டுப்பாடும் அதிக விலைக்கும் விற்க வேண்டிய நிலையும் ஏற்பட்டது. இதனை இன்றைய உலகில் காணப்படும் இளைஞர்கள் சகலரும் அறிந்து கொள்ளக்கூடியதாக இருந்தது. இதனால் உள்நாட்டு வர்த்தகம் தேவைப்பட்டது.

மற்றும் மாணவர்கள் தமது கல்வியை முன்னெடுப்பதிலும் பாரிய சவாலை எதிர் நோக்கிக் கொண்டனர். அதாவது நாடு முடக்கப்பட்டமையால் பொருளாதார நிலையில் பின்தங்கிய நிலையில் காணப்பட்ட மாணவர்கள் அதிக கஷ்டத்துக்கு உள்ளானர்கள். கல்வி அறிவு, இல்லாமையால் பொருளாதார சீரழிவு ஏற்பட்டது. ஒரு நாட்டினை கொண்டு நடாத்துவதற்கு அரசியல் எவ்வாறு முக்கியம் பெறுகின்றதோ அவ்வாறே ஒரு நாட்டினை வழிப்படுத்துவதற்கு அ அறிவு முக்கியமானதொன்றாக காணப்பட்டது.

இன்றைய கால கட்டத்தில் பொருளாதாரம் மிகவும் பின்தங்கிய ஓர் இடத்தில் காணப்படுகின்றது. இலங்கையில் அன்னியச் செலவாணி முறையின் தாக்கம் உட்புகுந்தது. அதனை சரி செய்வதாக பொருள்களின் விலையினை உயர்த்தினார் என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மையாகும் இதனால் வறுமையான நிலை ஏற்பட்டது. சிறு வயதிலே இளைஞர்கள் வேலைக்கு செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. இதனால் உள்நாட்டில் விவசாய நடவடிக்கை மேற் கொண்டும் சில ஏற்றுமதி இறக்குமதி சேவைகளை மேற் கொண்டும் தமது நாட்டில் நிலவி இருந்த பொருளாதார நெருக்கடியை சற்று சற்றாக குறைத்தனர். இதற்கு இளைஞர்களின் பங்கு ஓர் உந்துசக்தியாக அமைந்து. எனவே இன்றைய பொருளாதாரத்திற்கு இளைஞர்களின் பங்கு அவசியமான தொன்றாக காணப்பட்டது.

செல்வி ச.கிருசிகா
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்

# தன் வினை தனக்கே கேடானது

ஒரு கிராமத்தில் கண்ணன் என்ற விவசாயி ஒருவர் ஆட்டு மந்தை ஒன்றை வைத்திருந்தார். அவரது ஆட்டு மந்தைக்குள் நரியொன்று அடிக்கடி புகுந்து ஆடுகளைப் பிடித்து உண்டு வந்தது. அந்த நரி கையில் பிடிபட்டால், அதற்கு நல்ல பாடம் புகட்ட வேண்டுமென்று வெகுநாட்களாக எண்ணி வந்தார் விவசாயி.

அவர் எண்ணியது போலவே ஒருநாள் ஆட்டு மந்தைக்குள் புகுந்த நரியைப் பிடித்துக் கொண்டார் விவசாயி. ஆத்திரத்தில் அதனை நன்கு அடித்து அதன் வாலில், எண்ணெயில் நனைந்த துணி ஒன்றைச் சுற்றி தீ மூட்டினார்.

நரி வலியினால் கதறிக்கொண்டு, தீப்பிடித்த வாலுடன் அருகிலிருந்த விவசாயியின் வயலுக்குள் புகுந்து கொண்டது. நரி வயலின் நான்கு பக்கங்களிலும் புரண்டோடியது. அப்பொழுது அறுவடைக்குத் தயாராயிருந்த பயிர்களில் தீப்பற்றிக் கொண்டது. பயிர்கள் முழுவதும் தீயில் எரிந்து சாம்பலாகின. நரி அருகில் தென்பட்ட குளத்தில் தீயை அணைத்துத் தன்னைக் காப்பாற்றிக் கொண்டு தப்பி ஓடியது. விவசாயி தான் செய்த முட்டாள் தனமான தவற்றை எண்ணி வருந்தினார். பிறர் நமக்குத் தீமை செய்தால் அவர்களைப் போலவே, நாமும் அவர்களுக்கு தீமை செய்வது முட்டாள் தனமாகும் என்பதை அவர் உணர்ந்து மனம் திருந்தினார்.

செல்வி க. ஜமேதா
யா/கைதடி முத்தக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்

# நேர்மைக்குப் பரிசு

முன்னொரு காலத்தில் ராமு எனும் ஏழை விவசாயி ஒருவன் வாழ்ந்து வந்தான். ஒரு நாள் ராமு தன் வரண்ட நிலத்தை விவசாயம் செய்வதற்காக உழுத போது, விலை மதிக்க முடியாத புதையல் ஒன்று கிடைத்தது. அதனை தன் இல்லத்திற்கு எடுத்துச் சென்ற ராமு நடந்த நிகழ்வுகள் அனைத்தையும் தன் மனைவியிடம் கூறினான். அவள், "எங்கள் கஷ்டத்தைப் பார்த்த இறைவன் தக்க சமயத்தில் உதவியுள்ளார். புதையலை நாமே எடுத்துக் கொள்வோம். நல்ல நிலமாக வாங்கி விவசாயம் செய்வோம்" என்றாள்.

அதற்கு ராமு, "இல்லை இந்தப் புதையல் நமக்குச் சொந்தமானதில்லை. நிலத்தின் மேல் விளைச்சல்தான் நமக்குரியது. நிலத்திற்கு கீழ் கிடைக்கும் அனைத்தும் அரசருக்குரியது. நான் இப்போதே இந்தப் புதையலை அரசரிடம் ஒப்படைக்கப் போகின்றேன்" என்றான்.

புதையலில் எதையும் தொடாத அவன் அதை அப்படியே எடுத்துச் சென்று அரசரை வணங்கி, நடந்தது அனைத்தையும் அவரிடம் கூறினான். ராமு கூறிய அனைத்தையும் நிதானமாக கேட்ட அரசருக்கு ராமுவின் நேர்மை மன மகிழ்வைக் கொடுத்தது. அவனைப் பார்த்து "உன் நேர்மையைப் பாராட்டுகின்றேன். இந்தப் புதையலை நீயே எடுத்துக் கொள். உன் நேர்மையான நடத்தைக்காக, அரண்மனை களஞ்சியசாலையின் பிரதான அதிகாரியாக உன்னை நியமிக்கின்றேன்" என்றார். தன் நேர்மைக்குக் கிடைத்த புகழையும் பரிசையும் எண்ணி ராமு மகிழ்ச்சி அடைந்தான்.

செல்வி.மோ. அக்ஷனா

# உடைந்த பேனாவின் சுயசரிதை

நான் தெருவோரம் சென்று கொண்டிருந்த போது யாரோ அழும் சத்தம் கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன் ஆனால் எவரும் தென்படவில்லை. நான் மீண்டும் நடக்கத் தொடங்கினேன் மீண்டும் அதே அழுகுரல் கேட்டது. திரும்பிப் பார்த்தேன். யாரும் தென்படவில்லை. எனவே சிறிது நேரம் அதே இடத்தில் நின்று கொண்டிருந்தேன். அப்போது அந்தச் சத்தம் அருகில் இருந்த குப்பைக் கூடைக்குள் இருந்தே வந்தது. நான் குப்பைக் கூடைக்கு அருகில் சென்ற போது அங்கே ஒரு பேனை அழுது கொண்டிருந்தது. நான் அதனிடம் "நீ ஏன் அழுகின்றாய்?" எனக் கேட்டேன். அப்போது அது தன் கதையை கூறத் தொடங்கியது.

"நான் சுவிஸ் நாட்டில் தயாரிக்கப்பட்டேன். என்னைப் போல் பல வர்ணங்களில் பல நண்பர்கள் தயாரிக்கப்பட்டனர். எம் அனைவருக்கும் Ten Star எனப் பெயர் சூட்டினர். எங்களை இலங்கையிலிருக்கும் ஒரு கடைக்காரர் வாங்கினார். பின்னர் எம்மை கொழும்பு, துறைமுகத்திற்கு அனுப்பி வைத்தனர். பின்பு அந்தக் கடைக்காரர் எம்மை பெற்றுச் சென்று தன் கடையில் காட்சிப்படுத்தினார்.

ஒரு நாள் ஒரு சிறுமி தனது தங்கையின் (கமலா) பிறந்த தின பரிசாக என்னை வாங்கிக் கொடுத்தாள். கமலா என்னை அன்புடன் பாதுகாத்து வந்தாள்... உறுப்பெழுத்துப்போட்டி, கட்டுரைப் போட்டி என்பவற்றில் என் மூலமாகவே எழுதி வெற்றி பெறுவாள். ஒரு நாள் அவளது நண்பி ஒருத்தி அவள் மேல் பொறாமை கொண்டு என்னைத் தூக்கி உடைத்து விட்டாள். கமலா என் நிலையைக் கண்டதும் அழத் தொடங்கி விட்டாள். என்னைத் தன் தந்தையிடம் எடுத்துச் சென்று நடந்தவற்றை கூறி அழுதாள். அப்போது அவளது அக்கா ஒரு புதிய பேனையைக் கொடுத்து இதனை வைத்துக் கொண்டு அந்த உடைந்த பேனையை குப்பைத் தொட்டிக்குள் போட்டுவிடு எனக் கூறினாள்.

அவளும் என்னை மன வருத்தத்துடன் இந்த குப்பைத் தொட்டிக்குள் போட்டு விட்டாள். இதுவே எனது அழுகைக்கான காரணம்" என்று கூறியது என்னால் அதை அப்படியே விட்டுவிட்டுச் செல்ல முடியவில்லை. எனவே அதையும் தூக்கிக் கொண்டு வீடு நோக்கி நடந்தேன்.

செல்வி.பி.ஆரணி

# மரம் நடுவோம்

உலகில் உள்ள அனைத்து உயிரினங்களும் உயிர் வாழ உதவுவது ஒட்சிசன் என்ற உயிர் வாயு ஆகும். ஒட்சிசனை உற்பத்தி செய்வதில் தாவரங்கள் பெருந்துணை புரிகின்றன. சூரிய ஒளியைப் பெற்று பச்சையத்தின் உதவியுடன் நிலத்தடி நீரைப் பயன்படுத்தி உணவைத் தயாரிக்கின்றன. இதனை ஒளித்தொகுப்பு என்பர். இந்த உலகத்தின் படைப்பு விந்தை நிறைந்தது. உலகில் உள்ள அத்தனை பொருட்களும் ஏதோ ஒரு காரணம் பற்றியே படைக்கப்பட்டிருக்க வேண்டும். ஒரு உயிரின் அழிவில்தான் இன்னொரு உயிர் வாழ்கிறது. உலகில் காடுகள் இல்லையாயின் விலங்குகள் எவ்வாறு உயிர் வாழும்? காடுகள் விலங்குகளுக்கு உணவையும் உறைவிடத்தையும் அளிக்கிறது.

உலகில் உள்ள பொருள்கள் அனைத்தையும் உயிருள்ளவை, உயிரற்றவை எனப் பாகுபடுத்துவர். உயிருள்ளவற்றை தாவரங்கள், விலங்குகள் என்றும் வகுப்பர். தாவரங்களுக்கு உயிருண்டு என்பதை பல விஞ்ஞானிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். தாவரங்கள் இல்லாவிடில் உலகம் பாலைவனமாகிவிடும். தாவரங்கள், உயிரினங்கள் வாழ உதவுகின்றன. மரங்கள், பற்றைகள், புதர், புல், பூண்டு அனைத்தையும் தாவரங்கள் என்றழைப்பர். தாவரங்கள் யாவும் உயிரினத்தைச் சார்ந்தவை. இவை அனைத்தும் இயற்கை யின் கொடைகளாகும்.உணவு, உடை, உறைவிடம், மருந்து, மழை எனப் பலவற்றை அளிக்கின்றவை தாவரங்கள்தான். எரிபொருளாகவும் பயனை தருகின்றது. மனிதனால் உதவ முடியாதவற்றைத் தாவரங்கள் தந்துதவுகின்றன. மக்களின் குடிப்பெருக்கத்தினால் உணவு உற்பத்தியை பெருக்க வேண்டி உள்ளது. அதனால் காடுகள் அழிக்கப்படுகின்றன. சேனைப்பயிர்ச்செய்கையில் ஈடுபடுகின்றோம்.

மரங்கள் நிலத்தடி நீரை தமது வேர்களினால் உறிஞ்சி உயிர் வாழ்கின்றன. அத்துடன் சூரிய ஒளியைப் பெற்றுஒளித்தொகுப்பு மூலம் உணவினைத் தயாரிக்கின்றன. தாவரங்களில் உள்ள பச்சையம் உணவாக்கத்திற்கு உதவுகின்றது. தாவரங்கள் அனைத்தும் பகலில் ஒட்சிசனை வெளிவிடுகின்றன. அதே போல் காபனீரொட்சைட் வாயுவை அவை உள்ளீரப்பதன் மூலம் சமநிலையைப் பேணுகின்றன. மரங்கள் இல்லாவிட்டால் நமக்கு ஒட்சிசனே இல்லை, உயிர் வாழ்க்கையும் இல்லை.

மரங்கள் நமக்கு உணவளித்து வாழ்வளிப்பன. பறவைகளுக்கு உறைவிடமும், உணவும் அளிப்பன. காய், கனி, பூக்கள், விறகு இன்னும் பல வகையில் உதவுகின்றன. தாவரங்கள் நமது உலகினுக்குப் போர்வையாக இருந்து உயிரினங்களைக் காக்கின்றன. பூத்துக் குலுங்கி அவற்றில் தேனைச் சுரந்து தேனீக்களுக்கும் உணவளித்து தேன் கூடுகளில் தேனைச் சேகரித்து மனிதருக்கு உதவுகிறது. வரலாற்றுக் காலங்களில் சுண்ணத்தோடு தேனைக் கலந்து கோட்டைச் சுவர்களை அமைத்துள்ளனர்.

விலை மதிக்க முடியாத சந்தன மரங்களையும் மூலிகைகளையும் காடு தருகின்றது. தாவரங்களில் நாம் நமக்கு தேவையானவற்றை வளர்க்கின்றோம். ஆனாலும் அவற்றின் பயனை அனுபவிப்பதைத் தவிர அவற்றை வளர்ப்பதில் அக்கறை காட்டுவதில்லை. தென்னையை நட்டுத் தண்ணீர் ஊற்றினால் அது வளர்ந்து இளநீர், தேங்காய் எனத் தருகிறது. நன்றி மறவாமைக்கு எடுத்துக் காட்டாக நமது சான்றோர் தென்னையைக் கூறுவார்.

நன்றி ஒருவர்க்குச் செய்தக்கால் அந்நன்றி
என்று தருங்கொல் என வேண்டாம் தளரா வளர்தெங்கு
தாழுண்ட நீரை தலையாலே தான் தருவதால்,

பனைமரங்களுக்கு யாரும் தண்ணீர் ஊற்றிக் காப்பதுமில்லை. ஆனால் அதனால் மனிதர்கள் பெறும் பயனோ ஏராளம். ஒவ்வொரு மரமும் ஏதோ ஒரு வகையில் மனிதருக்குப் பயனளிக்கின்றன.

செல்வன் ந.ஆகீசன்
யா/கைதடி முத்துக்குமாரசுவாமி மகாவித்தியாலயம்

# பொய் சொல்லக்கூடாது பாப்பா!

அன்று பொற்கொடியைப் பார்ப்பதற்கு தமிழரசி வந்தாள். அவளிடம் தமிழ் புத்தகம் தருமாறு இரவலாகக் கேட்டாள். அதைக் கண்ணகி வாங்கிப் போய் விட்டாள்"- எனக்கூசாமல் பொய்சொன்னாள் பொற் கொடி. "சரி.. சரி... நீ படி.. நான் வேறு யாரிடமாவது வாங்கிக் கொள்கிறேன்" என்றாள் தமிழரசி. தமிழரசி கேற்றைத் தாண்டியதும், அவள் கேட்ட புத்தகத்தை ஒளித்து வைக்க பொற்கொடி எழுந்தாள். அந்த நேரம் பார்த்து, "மாமி! அம்மா இரண்டு தக்காளிப்பழம் வாங்கி வரட்டாம்" - என்றவாறு மீண்டும் வந்தாள் தமிழரசி. புத்தகம் எங்கே அவள் கண்ணில் படப்போகிறதோ என்று பயந்து போனாள் பொற்கொடி. அவசரம் அவசரமாக அதை சோபாவுக்கு அடியில் தள்ளினாள். நெஞ்சு படபடத்தது உடல் வியர்த்தது. தமிழரசி தக்காளி வாங்கிச்செல்லும்வரை பொற்கொடிக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை. சில முக்கியமான பாடங்களுக்கான விடைகளை மறுநாள் வகுப்பாசிரியையிடம் ஒப்புவிக்க வேண்டும். இருப்பினும் அவளது மனம் படிப்பில் முழு ஈடுபாடு கொள்ளவில்லை. தேவையில்லாமல் மனம் திக்திக்கென்று அடித்துக் கொண்டது. பொய் சொன்னதற்காக உள்ளம் உறுத்தியது. பேசாமல் தமிழரசி கேட்ட புத்தகத்தைக் கொடுத்திருக்கலாம் என்று அவள் நினைத்தாள். அப்போது "பொற்கொடி! கொஞ்சம் காலை மேலே தூக்கிக் கொள் எவ்வளவு தூசி - என்றவாறு அம்மா சோபாவுக்கு அடியில் துடைப்பத்தால் பெருக்க, மறைத்து வைத்திருந்த புத்தகம் வெளியில் வந்தது. இது என்னடி புத்தகம்?"-என்று அம்மா நீட்டவும், மாமி.. மாமி..!"- என்றவாறு தமிழரசி வரவும் சரியாக இருந்தது. பதறிப்போன பொற்கொடி, "அதைக் கொடும்மா இப்படி..." - என்று வாங்கிக் கொண்டு உள்ளறைக்கு ஓடினாள். அம்மாவும், தமிழரசியும் ஒன்றும் புரியாமல் அவளைப் பார்த்தனர். சற்று நேரம் கழித்து வந்த பொற்கொடியிடம் அம்மா, "என்னடி அது?" என்றாள். "ஒன்றுமில்லை ... அது இங்கிலீஷ் புத்தகம் --என்று மறுபடியும் பொய் சொன்னாள் பொற்கொடி. இரவு உணவுக்குப் பின் படிக்கலாம் என்று நினைத்தவளுக்குத் தூக்கம் தான் வந்தது. அடுத்த நாள். பாடங்களைப் படிக்காததால்.. ஆசிரியையிடம் அடி கிடைத்தது. பொய் சொன்னதால்.. தமிழரசியிடம் சகஜமாகப் பழக முடியாமல் போனது. பொற்கொடி ஒருபொய் சொன்னாள். அந்த ஒரு பொய்யை மறைக்கப் பல பொய்கள் சொல்ல வேண்டிவந்தது. கூடவே உடலும் உள்ளமும் பாதிக்கப்பட்டது. உண்மை பேசியிருந்தால் இந்த நிலை வந்திருக்காது. அதனால், எப்போதும் நாம் உண்மையே பேச வேண்டும்.

செல்வன் ம.சந்தோஷ்

# விநாயகரின் மறுபெயர்களும் அதற்கான காரணங்களும்

கணபதி - கணங்களுக்கு அதிபதி

ஆனைமுகன் யானையின் முகத்தை கொண்டவர்

ஐங்கரன் - ஐந்து கரங்களை உடையவர்(தும்பிக்கையுடன் சேர்த்து)

விக்கினேஸ்வரர் - விக்கினங்களைத் தீர்ப்பவர்

ஏகதந்தன் - ஒரு தந்தத்தை உடையவர்

மூஷிக வாகனன் - மூஷிகத்தை வாகனமாக கொண்டவர் (மூஷிகம் - எலி)

உமைபாலன் - உமாதேவியாரின் மைந்தன்

கபிலர் - பழுப்பு நிறமானவர்

கஜகர்ணர் - யானைக் காது உடையவர்

லம்போதரர் - பெரிய வயிறு உடையவர்

விகடன் - புத்திக்கூர்மை உடையவர்

விக்ணராஜர் - தடைகளை அகற்றுபவர் அல்லது அழிப்பவர்

விநாயகர் - மேலான தலைவர்

துமகேது - அசுரன் தாமோதரனை வென்றவர்

கணாத்யட்சர் - பூதகணங்களுக்கு எல்லாம் தலைவர்

பாலச்சந்திரர் -பிறைச் சந்திரனை சூடியவர்

வக்ரதுண்டர் - வளைந்த துதிக்கை கொண்டவர்

சூர்ப்பகர்ணர் - முறம் போன்ற காது கொண்டவர்

ஹேரம்பர் - ஐந்து முகங்களை உடையவர்

ஸ்கந்த பூர்வஜர் - கந்தன் எனும் முருகனுக்கு முன் பிறந்தவர்



செல்வி ந.பிரணவி
செல்வி லஸ்சிகா

# கொரோனா வைரஸ் பற்றிய வினா விடைத்தொகுப்பு

1. கொரோனா வைரஸ் என்றால் என்ன?

கொரோனா வைரஸ் விலங்குகள் மற்றும் மனிதர்கள் மத்தியில் காணப்படுகின்ற ஒரு வைரஸ் இனமாகும். இவற்றில் சில வைரஸ்கள் மனிதர்களுக்கு தொற்றாக ஏற்படுவதுடன் அந்தக் தொற்றுக்கள் சாதாரண சளி முதல் MERS மற்றும் SARI போன்ற சுவாச நோய் நிலைகளையும் ஏற்படுத்தும்.

2. புதிய கொரோனா வைரஸ் என்றால் என்ன?

"புதிய கொரோனா வைரஸ் என்பது மனிதர்கள் மத்தியில் இதற்கு முன்னர் இனங்காணப்படாத ஒரு வைரஸ் வகையாகும். 2019 டிசம்பர் மாதம் சீனாவின் வுஹான் பிரதேசத்தில் முதன் முறையாக இனங்காணப்பட்ட இந்த 2019nCOV எனஅழைக்கப்படுகிறது.

3. இது ஒரு அபாயகரமான வைரஸா?

ஏனைய சுவாச நோய்களைப் போன்று புதிய கொரோனா வைரஸ் தொற்றுவதினால் சளி, தொண்டை நோவு, இருமல், காய்ச்சல் என்பன போன்ற சிறிய அறிகுறிகள் ஏற்படுகின்றன. சிலருக்கு நிமோனியா அல்லது சுவாசக் கோளாறுகள் போன்ற நோய் நிலைமைகள் ஏற்படுகின்றன. மிகவும் அரிதாக இந்த நோய் மரணம் விளைவிக்கக் கூடியது. முதியவர்கள் மற்றும் ஏனைய நோய்களால் பீடிக்கப்பட்டுள்ளவர்கள் (நீரிழிவு மற்றும் இருதய நோய்கள்) இந்த வைரஸ் தொற்றுவதினால் கடுமையாக நோய்வாய்ப்படும் அபாயம் காணப்படுகிறது.

4. வீட்டில் வளர்க்கும் செல்லப்பிராணிகளுக்கும் தொற்றுமா?

இல்லை.

இதுவரையில் பூனைகள், நாய்கள் போன்ற செல்லப்பிராணிகளைத் தொற்றியுள்ளதாக அல்லது அப்பிராணிகள் மூலம் இந்த வைரஸ் மனிதர்களுக்குத் தொற்றியதாக எந்தவொரு சாட்சியும்இல்லை

5. புதிய கொரோனா வைரஸ் ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு பரவ முடியுமா?

ஆம்,

வைரஸ் தொற்றியுள்ள ஒருவருடன் நெருக்கமாகப் பழகுவதனால் இந்த புதிய கொரோனா வைரஸ் ஏனையோருக்கு பரவ முடியும். உதாரணமாக வீட்டினுள், அலுவலகத்தில் அல்லது வைத்தியசாலையில் வைரஸ் தொற்றியுள்ள ஆட்களுடன் நெருங்கிப் பழகுவதனால்

6. இந்த வைரஸிலிருந்து எவ்வாறு பாதுகாப்பு பெறுவது?

நோயைப் பற்றி அறிந்து கொள்ளுங்கள். இது தொடர்பாக சமகாலத் தகவல்களை பெறுவதற்கு தொற்று நோயியல் பிரிவின் (இணையத் தளத்தை பார்வையிடுங்கள்) இந்த வைரஸிலிருந்து பாதுகாப்பு

பெறுவதற்காக பின்வரும் செயற்பாடுகளைப் பின்பற்றுங்கள்:

உங்கள் இரு கைகளையும் சவர்க்காரமிட்டு அல்லது மதுசாரம் அடங்கிய கைகழுவும் திரவத்தினால் கழுவுங்கள். இதனால் கைகளிலுள்ள வைரஸ்கள் அழிந்து விடும்.

இருமல் தும்மல் அல்லது காய்ச்சலினால் பாதிக்கப்பட்டுள்ள ஆட்களுக்கும் உங்களுக்குமிடையில் ஆகக் குறைந்தது 1மீற்றர் (3 அடிகள்) தூரத்தைப் பேணுதல்.

7. ஏன் அப்படிச் செய்ய வேண்டும்?

இந்த வைரஸ் தொற்றியவர்கள் இருமும் போது அல்லது தும்மும் போது வைரஸ் அடங்கிய துளிகள் வெளிவருகின்றன. நீங்கள் அந்த ஆளுக்குநெருக்கமாக இருப்பீர்களானால் நீங்கள் சுவாசிக்கும் போது இந்த வைரஸ் உங்கள் உடலில் நுழைய முடியும். உங்கள் கண்கள், மூக்கு, வாய் என்பவற்றைத் தொடுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். ஏனெனில் உங்கள் இரு கைகளும் வைரஸ் மூலம் மாசடைந்த மேற்பரப்பை தொட்டிருக்கும் வாய்ப்புள்ளது. அவ்வாறு மாசடைந்துள்ள கைகளினால் உங்கள் கண்களினை மூக்கை வாயை தொடும் போது அந்த மேற்பரப்புக்களிலிருந்து வைரஸ்கள் உடலுக்குள் கடத்தப்படலாம்.

8. இந்த வைரஸிலிருந்து பாதுகாப்பு பெறுவதற்கு செய்ய வேண்டியவை எவை?

சரியான முறையில் முகக்கவசத்தை அணிய வேண்டும்.

கைகளை அடிக்கடி கழுவுதல் வேண்டும்

காய்ச்சல், இருமல், சுவாசக் கோளாறுகள் இருப்பின் உடனடியாக வைத்தியரை அணுகி சிகிச்சை பெறுதல் வேண்டும்.

செல்வி ந.நந்தினி

# நாட்டில் நிலவும் போதைப் பாவனை பற்றிய விழிப்புணர்வு

இன்று சமூகத்தில் உள்ள இளைஞர்கள் மற்றும் மாணவர்களின் ஆரோக்கியத்திற்கு பெரும் சவாலாக அமைந்துள்ள போதைப் பாவனை பற்றி ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும். மனித வளர்ச்சிப் பருவத்தின் ஆபத்தான மனித வாழ்வின் படிநிலையாக கூறப்படுகின்ற கட்டிளமைப் பருவ காலகட்டத்தில் ஒருவன் தன் முழு மனித விருத்தியில் 75 % வீதத்தினை அடைகின்றான். இங்கு அவனது விருத்தியில் குடும்பம், சமூகம், பாடசாலை, நண்பர்கள், ஆசிரியர்கள் மற்றும் ஊடகம் என்பன பாரிய தாக்கத்தினை ஏற்படுத்துகின்றன.

தீய பழக்கமுள்ளவர்களின் சேர்க்கை, முன் மாதிரிகளின் செல்வாக்கு, தவறான நண்பர்களின் சேர்க்கை, பருவ உடல் உள மாற்றங்கள் என்பன போதைப் பாவனையை கற்றுக் கொள்ளத் தூண்டு கின்றன. பொழுதுபோக்குக்காக பழகிக் கொண்ட பழக்கத்தை விட்டொழிக்க இயலாது மாணவர்கள் மற்றும் இளைஞர் கள் மிகவும் மோசமான நிலைக்கு தள்ளப்படுகிறார்கள். பாடசாலைக்கு அருகிலேயே போதைப்பொருட்கள் விற்கும் கடைகள் பெருகி வருவதும் இதற்கு ஒரு காரணமாகும். மாணவர்களுக்கு கைச்செலவுக்கென பெற்றோர்களும் உறவினர்களும் தாராளமாக பணத்தை கொடுப்பதும் இந்நிலைமைக்கு காரணமாக அமைகின்றது. முன்பெல்லாம் வயது வந்தவர்களே போதைப்பொருள் பழக்கத்துக்கு அடிமையான காலம் போய் இன்று மாணவர்களே போதைக்கு அடிமையாகி நிற்கின்றார்கள். இதனால் 13 - 20 க்கு இடைப்பட்ட மாணவர்கள் பலர் போதைப்பொருளுக்கு அடிமையாகி உள்ளனர் என போதைப்பொருள் தடுப்புப் பிரிவு தெரிவிக்கின்றது. இது தொடர்பான விளம்பரங்களும் இதற்கு கிடைத்திருக்கும் அங்கீகாரமும் திரைப்படங்கள் இத்தகைய போதைப் பழக்கத்தை இளைஞர்கள் கொண்டிருப்பது தவறல்ல என சித்திரிப்பதும் போதைப் பாவனையை அதிகரிக்க செய்கிறது. நன்றாக கற்கக் கூடிய மாணவர்களின் மதிப்பெண்கள் திடீரென குறையத் தொடங்குகிறது எனில் அவர்களின் நண்பர்களின் வட்டாரத்தை கவனிக்க வேண்டும். உடல் நிலையில் ஏதெனும் மாற்றம் தென்படுகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். மேலும் அவருடைய செயற்பாடுகளிலோ அல்லது உரையாடல்களிலோ ஏதேனும் மாற்றம் தென்படுகிறதா என்பதையும் கவனிக்க வேண்டும். அவர்களுடைய தனிமை அறையில் யாரும் நுழைவதை தடுக்கிறார்களா என்பதையம் அவதானிக்க வேண்டும். இதற்கு பெற்றோர்களும் ஆசிரியர்களும் முழுப்பொறுப்பாக இருக்க வேண்டும்.

போதைப் பழக்கத்தினால் ஏற்படும் விளைவுகள்

- போதைப் பழக்கத்தினால் முதலில் பாதிப்படைவது நரம்பு மண்டலம். இதனால் நினைவாற்றல் குறைக்கப்பட்டு கற்கும் திறன் பாதிக்கப்படுகிறது
- இதனால் இதயத் துடிப்பு பாதிக்கப்பட்டு இரத்த அழுத்தம் அதிகரிக்கிறது.
- மனதளவில் தன்னம்பிக்கை இழத்தல்
- உடல் சோர்வடைதல், குற்றவுணர்ச்சி, தனிமையை நாடுவது போன்ற மனநிலைக்கு உள்ளாதல்
- போதைப்பொருள் பாவித்துக் கொண்டு வாகனம் ஓட்டுவதனால் விபத்துக்கள் ஏற்படுதல்
- உயிரிழப்புக்கள், தற்கொலைக்கு வழி வகுத்தல்

ஆசிரியர்கள் பெற்றோர்கள் மற்றம் ந்ணபர்களின் ஆறுதலான அரவணைப்பான அணுகுமுறையினால் மட்டுமே இந்த விதமான பழக்கங்கள் மாணவர்களிடையே தோன்றாமல் இருக்க செய்ய முடியும்.

எனவே இறைஞர்களே மாணவர்களே உங்கள் எதிர்காலம் உங்கள் கையிலேயே...

போதைப்பாவனையை விடுத்து வளமான எதிர்காலத்திற்கு வழிவகை செய்யுங்கள்

M.Kabinajan

# Reading makes a Perfect Man

Reading makes a man perfect because reading and learning go hand in hand. The knowledge one acquires from reading a variety of materials is intense. People who read a lot tend to know more about life and are smarter when it comes to things like making decisions and handling situations. It may not be possible for one to know it all" but a lot of reading brings man close to perfection.

**Reasons why reading makes a man perfect**

- Boost imagination and creativity. Reading requires you to be visual. By reading, you expose your mind to a world of imagination, and you get to see things froma different angle.
- It connects the brain. The reading processrequires silence and a serene environment. Reading connects directly to the brain as you seek for more understanding and clarity. The brain is focused and clear in a silent state.
- It builds a sold foundation for communication. Reading connects you to the world and helps you to acquire communication is an essential tool and is enhanced by reading.
- Gaining experience from other people. When reading, you will get to learn from improves different skills in life decision making.
- Improve understanding. With more reading comes more understanding as you continue to pump your brain with information. For example when reading a book on politics, the more he or she will gain more knowledge of the Self-improvement.
- Reading is an important thing when you want to create a better version of yourself. It helps one understand things better and see the world from a different view.
- It is an exposure to new things. Different writers write about different topics and experiences. Through reading you get exposure to new ideologies and information. That, in turn, leads to an exploration into various new areas.

**Conclusion**

Materials for reading are a great source of knowledge and entertainment also. Children should learn reading skills at an early age for them to start acquiring knowledge for themselves earlier in life.

செல்வி சு.சாம்பவி

# அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம்

“தேடல் உள்ள உயிர்களுக்கு தான் நாளும் பசியெடுக்கும் ”

நீங்கள் எவ்வளவு தூரம் தேடுகிறீர்களோ அவ்வளவு தூரம் அறிவு நிறைந்தவராக மாறுவீர்கள். ஒரு காலம் இருந்தது எங்களுடைய சமூகம் பல சமூகங்களுக்கு முன்னுதாரணமாக சொல்லப்பட்டது.

ஆனால் இன்று நாங்கள் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்குவோம் என்று பேசிக் கொண்டிருக்கிறோம்.

அப்படியென்று சொன்னால் அதற்கான காரணம் என்ன? பரபரப்பான பிரமாண்டமான காட்சிகளுக்கு எங்களுடைய கண்களை தொலைத்து விட்ட எங்களால் மெதுவாக நுகரக் கூடிய எழுத்துக்களை நுகர முடிவதில்லை. ரீவிப் பெட்டிக்குள்ளும் கைத்தொலைபேசிக்குள்ளும் சிந்தனை அறிவை அடமானம் வைத்த எங்களால் படலை தாண்டி சிந்தனையை உருவாக்க முடிவதில்லை என்பதே வருத்தம்.

இன்றைக்கு எல்லாம் புத்தகங்கள் அதிகமாக விற்கப்படுகின்றன. ஆனால் சிந்தனையாளர்கள் உருவாவதில்லையே. புத்தகங்களை வாங்கி அடுக்குவதில் என்ன பெருமை இருக்கிறது. எத்தனை புத்தகங்களால் நீ உருவாகி இருக்கிறாய் என்பதில் தான் பெருமை இருக்கிறது.

என்னுடைய நண்பன் சொல்வான் நான் இருபது புத்தகங்களை வாங்கினேன். முப்பது புத்தகங்களை வாங்கினேன்னு. எவராலும் புத்தகங்களை வாங்க முடியாது. சிந்தனைகளை எப்படி உங்களால் வாங்க முடியும். வெறும் காகிதங்களையும் அச்சு கூலிகளையும் தான் வாங்கி வைத்துள்ளீர்கள்.

அறிவார்ந்த சமூகம் உருவாக வேண்டும் என்றால் சிந்தனைகள் உயர்வாக இருக்க வேண்டும். சிந்தனை உயர்வாக இருக்க வேண்டும் என்றால் அறிவு நிறைந்த புத்தகங்களைத் தேடிப் படிக்க வேண்டும். அறிவுள்ள புத்தகங்களால் தான் பயனுள்ள சமூகத்தை உருவாக்க முடியும்.

ஒரு புத்தகம் உன் வாழ்க்கையை மாற்றும். கண்ணதாசன் ஒரு பாடல் வரி உன் சிந்தனையை நல்வழிப்படுத்தும். புத்தகம் படிப்பது என்பது தவம். வரிக்கு உன் பயணத்தை மாற்றக் கூடியது. புத்தகங்கள் நின்று நிதானமாக உரக்க பேசக் கூடியது. எழுத்துக்கள் போல் பேசக் கூடியவை வேறு எதுவும் இல்லை .

எவனோ ஒருவன் எழுதிய கருத்தை நான் ஏன் ஏற்க வேண்டும். என்றோ சொல்லப்பட்டவை எப்படி என் வாழ்க்கையை மாற்றும். புத்தகம் என்பதால்மட்டும் படிக்க வேண்டுமா? அறிவார்ந்த குழந்தைகளே எல்லாடபுத்தகமும் பூசைக்கு உரியவை இல்லை. சில புத்தகங்கள் கிழிக்கப்பட வேண்டியவை. அதனால் படித்துக் கிழித்து விடுங்கள்.

ஒரு புத்தகம் என்ன செய்யும் அறிவு மகுந்த சிந்தனையாளர்களை உருவாக்கும். புதிய கருத்துக்களுக்கு உயிர் கொடுக்கும். நல்லது கெட்டதை சொல்லிவிடும். இலங்கையின் ஏழ்மை குடிசையில் உன்னை பொன்னியின் செல்வரோடு பயணப்படச் செய்யும். சோழ தேசம் வரை போய் வரச்சொல்லும். புரட்சியாளர்களுடன் கைகுலுக்கச் சொல்லும். பாஸ்போர்ட் இல்லாமல் நாடு கடக்கச் சொல்லும்.

வெள்ளைக் குதிரையில் ஏறி வானில் பறக்கச் சொல்லும். கற்பனைக் கதவை தட்டிவிடும். உன்னை எழுதச் சொல்லும். உன்னை உருவாக்கச் சொல்லும் பக்ககங்களை வாசியுங்கள். சிந்தனைகளை உருவாக்குங்கள். அறிவார்ந்த சமூகத்தை கட்டியெழுப்புங்கள். கேள்வி கேளுங்கள். புரட்சி வெடிக்கட்டும்

# இளைய சமுதாயத்தின் (போ)பாதை மாற்றம்

"யாழ்" என்றால் நினைவுக்கு வருவது இனிமையான ஒலி. அப்படிப்பட்ட இனிமையை தன்னகத்தே கொண்டது யாழ்ப்பாணம். இந்தியாவுக்கு தமிழ்நாடு போல் இலங்கைக்கு யாழ்ப்பாணம். ஆனால், சில மாதகாலங்களாக யாழ்ப்பாணமானது போதைப்பானம் ஆகிக்கொண்டு வருகிறது. முன்னைய காலங்களிலெல்லாம் கல்வி, கலாசாரம், பண்பாடெல்லாம் வேறுமாவட்டங்களுடன் போட்டிக்கு நின்ற யாழ் இன்று போதையால் பாதை மாறியுள்ளது. எல்லாவற்றுக்கும் மேலாக படிக்கின்ற மாணவர்கள் போதைப்பொருட்களை பயன்படுத்துகின்றார்கள் என்றால் நாம் அவமானப்பட வேண்டிய விடயமாகும். இது அவர்களை மட்டுமல்லாமல் இளைய சமுதாயத்தையும் சீரழித்து விடும்.

இதற்காகவே நாம் போதைப்பொருள் ஒழிப்பதினம் இருபத்தாறாம் திகதி ஆனி மாதத்தை பிரகடனப்படுத்தினோம். இதற்காக அன்றுமட்டும் போராட்டங்களில் ஈடுபட்டுவிட்டு மற்றைய நாட்களில் போதைக்கு அடிமையாகினால் நம் உழைப்பின் பயனேது? எனவே இவற்றிலிருந்து விடுபடுவது எவ்வாறு? என்றும் காரணம் என்னவென்றும் எடுத்துரைக்கலாம் என்று நினைக்கின்றேன். முதலாவதாக காரணங்களைப் பார்ப்போம். காரணங்களாவன:

1. தீயவர் நட்பு

தீயவர்கள், கெட்டவர்கள் தம்மைத்தாமே ஏமாற்றி அழித்துக்கொண்டு மற்றவர்களையும் (அவர்களோடு சேர்பவர்களையும்) சீரழிக்கின்றார்கள். "பூவோடு சேர்ந்த நாரும் பரகதி சேரும்" என்பது போல நாம் நல்லவர்களாக இருந்தும் தீயோருடன் சேர்ந்தால் மற்றவர்கள் பார்வையில் கெட்டவர்களாகவே தெரிவோம். ஒருவன் எவ்வாறு வரப் போகிறான் என்பதை அவனது சூழலே தீர்மானிக்கும். அதை ஒரு கதைமூலம் கூற உள்ளேன். ஒரு அரசன் ஒரு கிளியின் இரண்டு குஞ்சுகளை ஒரு முனிவரிடமும் மற்றையதை அவ்வூரில் இருக்கும் ஒரு பொல்லாதவனிடமும் கொடுத்துவிட்டு ஒரு வருடத்தின் பின் சென்று பார்த்தார். முனிவரின் கிளி "வாருங்கள் வாருங்கள்" என்று இனிய வார்த்தைகளையும் மற்றைய கிளி "அடிடா பிடிடா" என்று கெட்ட வார்த்தைகளையும் பேசியது. ஆனால் இரண்டு கிளிகளும் ஒரு தாய் வயிற்றுப்பிள்ளைகள். இப்பொழுது விளங்குகிறதா? சூழலின் வலிமை பற்றி.

2. பெற்றோரின் கவனயீனம்

தரம் 5 புலமைப்பரிசில் சித்தியடைந்துவிட்டால் மருத்துவ பீடமோ, பொறியியல் பீடமோ சென்றுவிட்டது போல ஒரு பாடசாலையில் சேர்த்துவிட்டு நான் யாரோ நீயாரோ என்று இருப்பார்கள். பிள்ளைகளோடு சிறிது நேரமும் செலவிடமாட்டார்கள். எனவே அன்பார்ந்த பெற்றோருக்கு பிள்ளை எங்கு செல்கின்றது? என்ன செய்கின்றது? என்று கேட்டறியுங்கள். அதற்காக வீட்டைத் தாண்டக்கூடாது என்று கூறாதீர்கள். சுதந்திரத்தோடு சேர்த்து நல்வழியையும் காட்டுங்கள். நீங்கள் அவர்களைப் படிப்பிப்பதற்காகச் செலவிடும் கஷ்டங்களைக் கூறுங்கள். உங்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலுள்ள நட்புறவே அவர்களை மேன்மையடையச்செய்யும்.

3. போதைப்பொருள் விற்போர்

போதைப்பொருள் விற்போர் சிறுவர்களை ஈர்ப்பதற்காக மிட்டாய் வடிவில் போதைப்பொருட்களையிட்டு கொடுத்து சமூதாயத்தைக் கெடுக்கின்றார்கள். பாவத்தைத் தேடிக்கொள்ளும் இந்த இழிவான செயல் விற்பவர்களுக்கு தேவையா? இது பற்றி உங்கள் குழந்தைகளுக்குச் சொல்லிக்கொடுங்கள்.

போதைப்பொருட்களைக் கண்டுபிடிப்பது எவ்வாறு? என்று கூறுகின்றேன்.

1. பொதுவாக நாம் வாங்கும் தின்பண்டங்களில் ஏதாவது மேலதிகமாகக் கலந்திருந்தால் உ+ம் (ஹேரோயின்)

2. தெரியாதவர்கள் ஏதாவது தந்தால்
3. மணம், சுவை என்பவற்றில் வேறுபட்டிருந்தால்
4. சாப்பிடும்போது நித்திரை. மயக்கம் வருவது போலிருந்தால்
5. அதை மீண்டும் சாப்பிட வேண்டும் போலிருந்தால்
6. அவற்றை சாப்பிட்டவுடன் மகிழ்ச்சியாக இருப்பது போலிருந்தால் அது போதைப் பொருளாகக்கூட இருக்கலாம். இவ்வாறு உணர்ச்சிகள் இருந்தால் உடனே வைத்தியரை அணுகவும்.

எம்மைப் பாதுகாக்கவேண்டியது எமது கடமை. எனவே பாதுகாப்புக்காக சில வழிகள்.

1. தெரியாதோர் தந்தால் வாங்கக்கூடாது.
2. மலிவு என்று கண்டதையும் சாப்பிடக்கூடாது. (பீடா)
3. புதிய திறந்த உணவுகளை உண்ணக்கூடாது.
4. தீயோருடன் சேரக்கூடாது.

இவைமட்டுமன்றி சிறுவர் துஷ்பிரயோகம். பெண்கள் துஷ்பிரயோகம் என்பனவும் உள்ளன. இவற்றுக்கு சிறுவர், பெண்கள் உரிமை என்பவற்றால் தகுந்த தண்டனை கிடைக்கும். எனவே இவற்றை தடுக்க மன அடக்கம் வேண்டும். அதற்கு சமயவழிபாடு, தியானம் போன்றவை வழிவகுக்கும்.

"இன்றைய சிறுவர் நாளைய தலைவர்" என்பதற்கமைவாக இவற்றைப்பற்றி விழிப்புணர்வுடன் இருந்து நாளைய சமுதாயத்தை சிறந்ததொன்றாகக் கட்டியெழுப்புவோமாக.

"யாரையும் ஏமாற்றவும் கூடாது
யாரிடமும் ஏமாறவும் கூடாது."

என்ற வேதவாக்குடன் வையகம் சிறக்க வாழ்வோமாக

"மாணவர் சக்தி மாபெரும் சக்தி"

Baranee Printers, Nelliady
0775991949